Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 22 திங்கட்கிழமை (08.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 008

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

















# 13 ஆவது திருத்தத்தை தீர்வாக ஏற்கவில்லை

## என்கிறார் சம்பந்தன்



(கொழும்பு)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி கொண்டுவரப்பட்ட 13 ஆவது சட்டத்திருத்தத்தை தமிழர் இனப்பிரச்சினைக்கான ஓர் அரசியல் தீர்வாக தாம் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை என்றும், ஐக்கிய இலங்கைக்குள் அர்த்தமுள்ள, நடைமுறைச் சாத்தியமுள்ள ஒரு தீர்வையே தாம் நாடுவதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமிழோசையிடம் தெரிவித்துள்ளார். 13ஆவது சட்டத் திருத்தத்தை நிறைவேற்றத் தயார் என்று அரசு கூறவில்லை, அதை அரசியல் தீர்வாக அவர்கள் முன்னிறுத்தவும் இல்லை.

ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கும் குறைந்தபட்ச அதிகாரங்களைப் பறிக்கவே திவிநெகும சட்ட மூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல் பிரச்சினைக்கு 13 ஆவது சட்டத் திருத்தம் தீர்வாகாது. ஜனாதிபதி அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியாவுக்கு வழங்கிய பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. நாடாளுமன்றத் தேர்வுக்குழுவில் சேரச் சொல்லி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியாவிடமிருந்து அழுத்தம் ஏதும் வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சூதாட்டத்தில் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.புகையிரத நிலையக் கட்டடத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட சிறுவன் ஒருவன் உட்பட ஐவர் யாழ்.பொலிஸாரினால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முற்பகல் 1.45 மணிக்குப் பொலிஸாருக்கு கிடைத்த தொலைபேசித் தகவலையடுத்து புகையிரத நிலையக் கட்டடத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் இந்தச் சிறுவர்களைக் கைது செய்தனர்.

இவர்கள் சூது விளையாடிய துருப்புச் சீட்டுக்கள் மற்றும் 6 ஆயிரத்து 500 ரூபா பணத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்.பொலிஸ் நிலைய சமூக மேம்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஜயந்த தலைமையிலான குழுவினரே இவர்களைக கைது செய்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதேசசபை காணி விவகாரம் தொடர்ந்தும் இழுபறிநிலையில்

(திருநெல்வேலி)

இராணுவத்துக்கும், நல்லூர் பிரதேச சபைக்கும் இடையிலான காணிப்பிரச்சினை முற்றிய நிலையில் உள்ளது.

இது சம்பந்தமாக நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப. வசந்தகுமார், சபையின் இரண்டு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சரவணபவன் ஆகியோர் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது, இராணுவம் இக்காணி தமக்குரியது எனக் கூறுவதால் வழக்குக்குப் போகுமாறு கூறி பொலிஸ் அதிகாரி தங்களுக்குக் கூறியதாகத் தவிசாளர் தெரிவித்தார்.

தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினரும் கோப்பாய் இராச வீதியில் அமைந்துள்ள 51ஆவது படைப் பிரிவுக்குச் சென்றபோது இது பற்றிப் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அறிக்கை கிடைத்த பின்னரே ஆராய முடியும் என இராணுவ

19 ஆம் பக்கம் பார்க்க



வென்றது மேற்கிந்திய தீவுகள் அணி

விரிவான விபரம் 20 ஆம் பக்கத்தில்

## இருபாலை சந்தியில் விபத்து நால்வர் காயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் பருத்தித்து றையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்து கொண்டிருந்த தனியார் சிற்றூர்தி ஒன்று இருபாலைச் சந்தியில் பின்னால் வந்து கொண்டிருந்த சிற்றூர்திக்கு வழிவிட முற்பட்டபோதே இச்சம்பவம் இடம் பெற்றது.

குறித்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, சிமெந்தினாலான பெயர்ப் பலகையில் மோதி விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் சிறு காயங்களுக்குள்ளான மூவர் கோப்பாய் வைத்திய சாலையில்

19 ஆம் பக்கம் பார்க்க

## நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல்

(கொழும்பு)

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீது இனந்தெரியாத நபர்கள் நேற்றைய தினம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கல்கிசை சென்.தோமஸ் வித்தியாலயத்திற்கு அருகில் வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தாக்குதல் சம்பவத்தில் நான்கு பேர் கொண்ட குழு ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் செயலாளர் மஞ்சுள

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய உத்தரவாதத்துடன் அரசு–கூட்டமைப்பு பேச்சு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொள்ளும் என்ற இந்தியாவின் உத்தரவாதத்துடன், அரசாங்கம் - கூட்டமைப்பு இடையேயான இருதரப்புப் பேச்சுக்கள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது.

அண்மையில் புதுடில்லி சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் பங்கேற்கச் செய்யும் வகையிலான செயற்பாடு குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் விரிவாகக் கலந்துரையாடியிருந்தார்.

இதன்படி தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு சமநேரத்தில் இடம் பெறுவது என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டுடன் கூட்டமைப்

19 ஆம் பக்கம் பார்க்க

## முன்னிலை சோசலிச கட்சியின் வாகனம் மீது கழிவு ஒயில் வீச்சு

### யாழ்.நல்லூரில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த முன்னிலை சோசலிசக்கட்சியின் சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பினர் பயணித்த வாகனத்தின் மீது இனந்தெரியாத நபர்களினால் கழிவு ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் நல்லூர் பின் வீதியில் இடம்பெற்றுள்ளது . நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கான விஜயம் குறித்து தீர்மானிக்காத நவநீதம்பிள்ளை

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்னமும் தீர்மானிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான உத்தேச விஜயம் குறித்து நவநீதம்பிள்ளை இன்னமும் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தொடர்பாடல் பிரிவு அதிகாரி ரவினா சம்தாசனி தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கு முழுமையான பங்களிப்பு வழங்கவேண்டும்

## சர்வதேச அமைப்புக்களிடம் டக்ளஸ் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கு சர்வதேச அமைப்புக்கள் தமது முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆசிய முஸ்லிம் செயற்பாட்டு இணையத்தின் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் செயலகத்திற்கு நேற்று முன்தினம் வருகைதந்த பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும், தெரிவிக்கையில் யுத்தத்திற்குப் பின்னரான இக்காலப்பகுதியில் அபிவிருத்தி செயற்றிட்டங்களையும் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வினையும் பெற்றுக் கொடுப்பதற்கு விரும்பாத சில தமிழ் அரசியல் கட்சிகள் அவ்வாறு தீர்வு கிடைக்கும் பட்சத்தில் தமக்கு அரசியல் இல்லாது போய்விடும் என்பதற்காக அதனை விரும்பவில்லை என்றும், தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதே தமது நோக்கம் எனக்கூறி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை எமது மக்கள் விலை மதிக்க முடியாத உயிர் உடமைகளை இழந்துள்ள நிலையில் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்காக சர்வதேச அமைப்புக்கள் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இந்தக்குழுவில் இந்தியா, மலேசியா, சுவீடன் உள்ளிட்ட 06 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# வேகமாகப் பரவுகிறது டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் மீண்டும் தீவிரமாகப் பரவி வருகிறது. குறிப்பாக குருநகர், தெல்லிப்பழை, கொக்குவில் போன்ற பகுதிகளில் தீவிரமாக டெங்கு நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இவற்றில் குருநகர், தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களில் சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சி சபை, பொது மக்கள், ஏனைய நிறுவனங்களின் ஒன்றிணைந்த செயற்பாட்டினால் நோய்ப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது. எனினும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கொக்குவில் பகுதியில் நோய்பரவல் அதிகரித்து வருவதுடன் ஏனைய பகுதிகளுக்கும் பரவக்கூடிய ஆபத்து நிலையைத் தோற்றுவித்துள்ளது. அத்துடன் கொக்குவில் பகுதியில் டெங்கு நோய் இறப்பொன்றும் ஏற்பட்டுள்ளது. பொது மக்கள், உள்ளூராட்சி சபையின் ஒத்துழைப்பு உரிய முறையில் கிடைக்கப் பெற்றாலே இந்தப் பகுதியிலும், ஏனைய பகுதிகளிலும் டெங்கு நோய் பரவுவதையும் இதனால் ஏற்படக்கூடிய அநியாயமான உயிரிழப்புகளையும் தவிர்க்க முடியுமென சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் 8ஆம் திததி முதல் 14ஆம் திகதி வரையான காலப்பகுதி விசேட டெங்கு தடுப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்க போட்டி முடிவுகள்

கொழும்பு பல்கலைக் கழகத் தின் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ்த் திறன்காண் போட்டிகளின் அகில இலங்கை ரீதியான போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இம்முறை வடமாகாணத்தில் இருந்து பங்கு பற்றிய பல போட்டியாளர்கள் பரிசில்களை பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசளிப்பு விழா, முத்தமிழ் விழாதினமான எதிர் வரும் 14 ஆம் திகதி காலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இதில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு,

**கட்டுரை:**

கீழ்ப்பிரிவு

நகுலகுமார் அபிராமி (கிளி/திருவையாறு மத்திய மகா வித்தியாலயம்), தயாபரன் லதீசனா (யா/சவகச்சேரி இந்துக் கல் லூரி), ச.இரத்தினேஸ்வரி (கொ/சைவ மங்கையர் வித்தியாலயம்).

மத்திய பிரிவு

சுந்தரசிவம் கோகிலன் (வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்), க.புஸ்பகுமாரி (கொ/சென். மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம்.), முஜப் நிப்லா (திரு/அல்.அன்சார் மு.ம.வித்தியாலயம்)

மேற்பிரிவு

மேரி தயாளினி(மன்/புனித வளையார் றோ.க.த.வி), சிவலிங்கம் சிபாசினி (மு/பாலிநகர் மகா வித்தியாலயம்), ரு.அலைமத் பௌஜியா (புத்/தில்லையடி மு.ம.வித்தியாலயம்), நாகேந் திரன் கோதன்யா(யா/சாவகச் சேரி இந்துக்கல்லூரி)

**சிறுகதைப் போட்டி**

மத்திய பிரிவு

பவனேந்திரன் டினுஜா (கிளி/முருகானந்தா கல்லூரி), சின்ராசா தனஞ்சிகா (முல்/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), குணராஜா கட்சன் போன்ராஜ் (வவு/வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்)

மேற்பிரிவு

விமலாம்பிகைபாகன் திவாகரன் (யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி), சு.யு.கிறிஸ்டினா (பு/புனித மரியாள் த.ம.வித்தியாலயம்), ராஜேந்திரகுமார் தேவகி (பது/ ஆலிதெரு த.ம.வித்தியாலயம்.) (தொடரும்...)

# முதியோர் சங்க விளையாட்டு; பரிசளிப்பு விழா நாளை

(ஆனைக்கோட்டை)

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சங்கத்தலைவர் சி. பௌலின் தலைமையில் நவாலி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இச்சங்கத்தின் விளையாட்டு விழா 'இதம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று முன் தினம் நடத்தப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் நல்லையா புரட்சிதாஸன் நவாலி கிழக்கு கிராம சேவையாளர் பி.நித்தியானந்தன் இதம் நிறுவனத்தின் இணைப்பாளர் சாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாளை நடைபெறும் நிகழ்வில பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் கலந்து கொள்வார்.

இவ்விழாவில் பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக பட்டதாரி பயிலுனர்களின் 'விடியலைத் தேடி' என்ற விழிப்புணர்வு நாடகமும் முதியோர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (104)

# அஞ்சல் தினப் போட்டியில் மட்டுவில் மாணவி 2ஆம் இடம்

(யாழ்ப்பாணம்)

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் திணைக்களத்தால் மாணவர்கள் இடையே நடாத்தப்பட்ட ஆங்கில மொழிமூல போட்டியில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய மாணவி- இரண்டாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

அஞ்சல் திணைக்களத்தினால் தரம் 12, தரம் 13 மாணவர்கள் இடையே தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் மாணவி ச.ஆர்த்திகா இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பள்ளி வாசல் காணி பகிர்ந்தளிப்பு



யாழ்ப்பாணம் பொம்மை வெளியில் 1ஆம் குறுக்கு வீதியில் யாழ். சின்ன பள்ளிவாசலுக்குரிய காணிகளை 25 காணியற்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பின்னர் யாழ். மாநகரசபை உறுப்பினர் சரபுல் அனாம் பார்வையிடுவதைக்காணலாம்.

# கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர் தின நிகழ்வுகள்

கைதடிமுதியோர் இல்லத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அனுஷ்டிக்கப்பட்டுவந்த முதியோர் வாரத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. முதியோர்கள் வாழும் சமூகத்தில் வைத்தே பாராமரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நேற்றைய தினம் கைதடிச்சந்தியில் இருந்து பேரணிக் ஆரம்பமாகி முதியோர் இல்லத்தை சென்றடைந்தது. வழிப்புணர்வை ஏற்படுத்த வாகனங்களில் விழிப்புணர்வு வாசகங்களும் ஒட்டப்பட்டன. தொடர்ந்து வடமாகாண சமூகசேவைகள் திணைக்களப்பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்-இளங்கோவன் சிறப்பு விருந்தினராக வடமாகாண தொழில்துறைதிணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன் கௌரவவிருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் செல்வி ரி.தர்சினி ஆகியோர் கலந்து கொண்டனர்.. முதியோருக்கிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதமவிருந்தினர் வழங்கிவைத்தார். அத்தோடு புங்கன்குளம் ஏழிசைநர்த்தனாலய மாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. முதியோர் இல்லத்தில் 89 வயோதிப மாதுக்கள் உட்பட 181 வயோதிபர்கள் பராமரிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (80)







# முகமாலைக் கிராமங்களில் விரைவில் மீள்குடியேற்றம்

## கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாத முகமாலைப் பிரதேசத்தின் மிகுதியாக உள்ள கிராமங்களில் விரைவில் மீள் குடியேற்றம் இடம்பெறவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முகமாலைப் பகுதியில் மீள் குடியேற்றத்தின் பெரும்பகுதி நிறைவடைந்துள்ளது. அப்பகுதியிலுள்ள மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் இரண்டு அல்லது மூன்று கிராமங்களில் மட்டுமே மீள்குடியமர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.


இப்பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் பணி நிறைவடைந்ததும் இங்கு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் கண்ணி வெடி அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்தி மீள்குடியேற்றத்தை விரைவில் பூர்த்திசெய்ய எதிர்பார்த்துள்ளோம்.

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்றவேளை அதிகளவான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசமாக முகமாலை காணப்படுகிறது. கண்ணிவெடி அகற்றும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. எஞ்சிய பகுதிகளில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்திய நிதியுதவியுடனான வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் தெரிவுசெய்யப்பட்ட 500 பேருககு வீடமைப்புக்கான தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# றோல்ஸ்'க்குள் சணல் கயிறு துண்டு



(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் இயங்கும் சிற்றுண்டிக் கடையில் விற்பனை செய்யப்பட்ட றோல்ஸ் சிற்றுண்டியில் சணல் கயிற்றுத் துண்டு காணப்பட்டமை வாடிக்கையாளரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிற்றுண்டி வகைகளை தயாரித்து கடைகளுக்கு வழங்கும் வியாபாரி மூலம் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட றோல்ஸிலே இக்கயிற்றுத் துண்டு காணப்பட்டதாகவும் வாடிக்கையாளர் ஒருவர் மேற்படி கடைக்கு சிற்றுண்டி வாங்கி சாப்பிட்டவேளை இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்படும் சிற்றுண்டி வகைகளை வாங்கும் நுகர்வோரே அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும், இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (18)

# உடுவில் மகளிர் கல்லூரியில் புகைப்படவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியில புகைப்படவியல் கருத்தரங்கு ஒன்று கடந்த புதன்கிழமை நடாத்தப்பட்டது.கல்லூரியில் தொடர்பாடலும் ஊடகக் கற்கை நெறியும் ஆசிரியர். திருமதி. ஆர்.சுதாஜினியினால் ஒழுங்கு செய்யப்பட்ட, இக்கருத்தரங்கில் வளவாளராக ஊடகவியலாளர் கு.பதிதரன் கலந்து கொண்டார்.

காலை 9.30 மணியிலிருந்து 12.30 மணிவரையில் நிகழ்த்தப்பட்ட, இக்கருத்தரங்கை கல்லூரியின் அதிபர் திருமதி.சிறாணி மில்ஸ் தலைமையேற்று ஆரம்பித்து வைத்தார்.

உடுவில் மகளிர் கல்லூரியின் தொடர்பாடல் கற்கைநெறி மாணவர்கள் மற்றும் குறித்த பாடநெறியைப் பயிலும் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புகைப்படக்கருவியை தொழில்நுட்பரீதியாகக் கையாளல் மற்றும் பொருள் பொதிந்த புகைப்படங்களை எடுத்தல் அதற்கான நுணுக்கங்கள் எனப் பல விடயங்கள் இக்கருத்தரங்கில் எடுத்தாராயப்பட்டது.

மாணவர்கள் தாமாகப் புகைபடக்கருவிகளை, இயக்கி நுணுக்கமான புகைப்படங்களை எடுப்பதற்கான செயன்முறைப் பயிற்சியும் இக்கருத்தரங்கில் வழங்கப்பட்டது.

# சீரற்ற பஸ்சேவை அரச ஊழியர்கள் சிரமம்

(மல்லாவி

மல்லாவி துணுக்காய் பிரதேசங்களில் இருந்து 2.00 மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வரமுடியாத நிலையில் அப்பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களும், அரச ஊழியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

துணுக்காயிலிருந்து யாழிற்கான இறுதி பஸ் மதியம் 2.00 மணிக்குப் புறப்படுகிறது.

இந்தத்தனியார் பஸ்ஸினைத் தவறவிட்டால் அப்பிரதேசங்களிலேயே தங்க வேண்டிய சூழ்நிலையே காணப்படுகின்றது.

வவுனியாவிற்கான தனியார் பஸ் மாலை 5.00 மணிக்குப் புறப்படுவதால் அந்தப் பஸ்சில் மாங்குளம் சென்று இரவு 9.00 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்து சேரும் ஆசிரியர்களும், அரச ஊழியர்களும் தினசரி சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வாறான உத்தியோகத்தர்களின் போக்குவரத்து நலன்களில் அக்கறை செலுத்துவதன் மூலமே வன்னிப் பிரதேச மக்களிற்கான சிறந்த சேவையை இப்பிரதேச ஊழியர்கள் மூலம் பெறமுடியும் என பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (148)

# கோப்பாய் சுகாதாரப் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

நுளம்புக்கட்டுப்பாட்டு வாரம் நாளை 8 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பல நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ்வாரத்தில் கோப்பாய் பிரதேசத்தில் வீட்டுத் தரிசிப்பு நடைபெறவுள்ளது.

இத்தரிசிப்பில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சுகாதாரத் தொண்டர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், தொண்டர்கள், பொலிஸார் ஆகியோர் ஈடுபடவுள்ளனர்.

8 ஆம் திகதி அச்சுவேலி வடக்கு, வளவாய், இடைக்காடு, பத்தைமேனி, கதிரிப்பாய், தம்பாலை ஆகிய இடங்களுக்கும், 9 ஆம் திகதி அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு, ஆவரங்கால் மேற்குப்பகுதிகளுக்கும், 10 ஆம் திகதி புத்தூர், வாதரவத்தை பிரதேசங்களுக்கும், 11 ஆம் திகதி சிறுப்பிட்டி, அச்செழு, 12 ஆம திகதி கோப்பாய், இருபாலை, 14 ஆம் திகதி உரும்பிராய்க்கும் வீட்டுத்தரிசனம் இடம்பெறவுள்ளது.

இந்நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்துக்கு பொதுமக்ளை முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி த.ஜெயசீலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (137)

# புதிய அதிபர் நியமனம்

(மல்லாவி

மல்லாவி மத்திய கல்லூரியின் பிரதி அதிபராக செ. செல்வச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ். மாவட்டம் வலிகாம வலயத்திலும் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் வலயத்திலும் சிறந்த உடற்கல்வி ஆசிரியராகக் கடமை யாற்றியதுடன் இலங்கையின் பல் வேறுபட்ட விளையாட்டு நிகழ்வுகளில் மாணவர்களைப் பங்குபற்ற வைத்தமையுடன் இவரும் பல பதக்கங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் துணுக்காய் வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் நீண்ட காலம் கடமையாற்றிய ஆசிரியர்கள் உள்ளூர் இடமாற்றம் செய்யப்பட்டமையால் மல்லாவி மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் மு.யோகபுரம் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதற்குப் பின்னர் இவர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (148)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர் தின விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் இறைவணக்கம் செலுத்துவதையும், விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர் பாடசாலை அதிபருக்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும் காணலாம். (116)

இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பை செலுத்த இயலும்.

*- அன்னை திரேசா*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## கட்சிப் பதிவும் சுரேஷின் கதியும்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு செல்வம், சித்தார்த்தன், சங்கரி போன்றவர்களையெல்லாம் கையெழுத்திட வைத்துச் சம்பந்தனுக்குக் கடிதம் அனுப்பிவிட்டிருப்பது ஒருவகையில் சுரேஷுக்கு வெற்றி என்றுதான் சொல்லவேண்டும்.

அதையும்விட இந்தக் கோரிக்கைக்கு புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளிடமும் சுரேஷ் தீவிரமாக ஆதரவைத் திரட்டி வருவதாகத் தெரிகிறது. முன்னாள் புலிகள் இயக்க ஆதரவு இணையத்தளங்களெல்லாம் கூட்டமைப்பின் சுரேஷ் குழுவுக்கே முக்கியத்துவம் கொடுத்து எழுதிவருவதைப் பார்க்க முடிகிறது. ஆனால் உள்ளூரில் தனித்துப் போட்டியிட்டால் ஒரு சீற் கூட எடுக்க முடியாதளவு ஆதரவைத்தான் இந்தக்குழு கொண்டிருக்கிறது என்பதே தமிழரசுக் கட்சியினரின் அலட்சியமான பதில்களுக்குக் காரணம் என்பது சிறுபிள்ளைக்கும் தெரியும்.

அந்த வகையிலும் தமிழரசுக்கட்சிக்கு மிரட்டலைக் கொடுக்கும் நோக்கில், சுரேஷ் குழுவினர் மீள்குடியேறிய மக்கள் பகுதிகளுக்குச் சென்று, இதுவரை காலமும் "அற்ப சலுகைகளுக்காக மக்கள் சோரம் போய்விட மாட்டார்கள்" என்று அவர்கள் சொல்லி வந்த அந்த "அற்ப சலுகைகளை" தாங்களே வழங்குவதற்கான எத்தனங்களைச் செய்துவருகிறார்கள்.

மறுவளமாக இந்த நடவடிக்கை நமக்கு உணர்த்துவது, கூட்டமைப்புக்குள் உள்ள இரு குழுக்களில் தமிழரசுக் கட்சிக் குழுவுக்கே தொடர்ந்தும் உணர்ச்சிகர வாய்ப்பேச்சு வீரங்களால் வாக்குகள் கவரும் திறன் இருப்பதாகவும், அதை மேவத் தங்களால் முடியாது என்பதை சுரேஷ் குழு உணர்ந்திருப்பதாகவும் தெரிகிறது. உணர்ச்சிகரப் பேச்சுப் பேசி மக்களை ஏமாற்றும் உரித்தை தமிழரசுக் கட்சியிடமிருந்து பறிப்பது சுலபமில்லை என்று தெரிந்துதான் சுரேஷ் குழு சலுகைகள் மூலம் ஆதரவு திரட்டும் நடவடிக்கைக்கு இறங்கியிருக்க வேண்டும்.

இது ஒருவகையில் தமிழரசுக் கட்சியை இந்த "உணர்ச்சி அரசியல்" விஷயத்தில் முந்த முடியாது என்னும் தோல்வியை சுரேஷ் குழு உணர்ந்து இப்போதே ஒப்புக்கொண்டுவிட்டது என்பதுதான். தவிரவும், ஆயுதக் குழு, ஒட்டுக்குழு, மண்டையன் குழு, அரசாங்கத்திடம் பணம் வாங்கிய குழுக்கள் என்ற அஸ்திரங்களையெல்லாம் தமிழரசுக்கட்சி எடுத்து விடுமாக இருந்தால், சுரேஷ் அன்ட் கோ வினர் முன்னாள் கஜேந்திரகுமார், குதிரை கஜன், பத்மினி வகையறாக்களைவிட மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவார்கள் என்பது சுரேஷுக்குத் தெரியாததல்ல.

அத்தோடு செல்வம், சித்தர், சங்கரி எல்லாம் சுரேஷைக் கழட்டிவிட்டு அந்தப்பக்கம் பாய்வதற்கு, இந்தக் கட்சிப் பதிவு விஷயம் ஒன்றும் பெரிய கொள்கைத் தடையாக நிற்கப் போவதில்லை என்பதும் அவர்களறிந்ததே. எனவேதான் சம்பந்தர் கூலாக, "கடிதம் அனுப்பியிருக்கிறார்கள்; நமது கட்சியைக் கூட்டிக் கவனிக்கிறோம்" என்று பந்தைக் கொஞ்சம் எட்டத்தில் தட்டிவிட்டுப் பேசாமலிருக்கிறார்.

புலம்பெயர்ந்தவர்கள் பக்கமிருந்து 'பதிவு செய் பதிவு செய்' என்று கொஞ்சம் கூடுதல் தொணதொணப்பை சுரேஷ் கிளப்புவாராக இருந்தால், "களத்தில் இல்லாதவர்கள் நமக்குக் கட்டளையிட வெளிக்கிடக் கூடாது" என்றும் சம்பந்தர் கர்ஜிக்கத் தயங்கமாட்டார்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், சுரேஷின் இந்தக் கால்வைப்பும் சறுக்குபலகையின் மீதுதான் என்றே தெரிகிறது. ஆனால் சறுக்கப்போவது தெரிந்தால், ரோசத்தைப் பார்த்துக்கொண்டு நிற்காமல் திரும்பித் தமிழரசுக் கட்சியைத் தாவிப் பற்றிவிடவே முயற்சிப்பார் என்பதே சுரேஷைத் தெரிந்தவர்களது அனுமானம்!

*- ஆசிரியர்*

# சர்வதேச தரத்திற்கமைவாக சிறைச்சாலை பராமரிப்பு இல்லை

## மனிதவுரிமை ஆணைக்குழு குற்றச்சாட்டு

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகள் சர்வதேச தரத்திற்கு அமைய பராமரிக்கப்படுவதில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

தற்போது நாட்டிலுள்ள கைதிகளின் எண்ணிக்கைக்கு அமைய போதுமான இடவசதிகள் இல்லாமை முக்கிய பிரச்சினையாகும் என ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்களில் நான்கில் ஒரு பகுதியினருக்கான இடவசதி மாத்திரமே சிறைச்சாலைகளில் காணப்படுவதாக மனித உரிமைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவிடம் வினவியபோது இந்தப் பிரச்சினை நீண்டகாலம் நிலவிவருவதாக ஒப்புக்கொண்டார்.

தற்போது உள்ள சிறைச்சாலைகளின் இடவசதிகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக சிறைச்சாலைகளில் உள்ள பழைய கட்டடங்களை புதுப்பிக்கவும் வசதிகளுடன் கூடிய பகுதிகளுக்கு சிறைச்சாலைகளை மாற்றவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை பூர்த்தியாக நீண்டகாலம் தேவைப்படும் எனவும் சிறைச்சாலைகளில் இருந்து விடுவிக்கப்படும் கைதிகளை மீண்டும் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காவதை தடுக்கும் வகையில் சிறைச்சாலைகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கடனட்டை மோசடிகளை தவிர்ப்பதற்கு ஆலோசனை

கொடுக்கல் வாங்கல்களுக்கு கடன் அட்டைகளை பயன்படுத்தும்போது உள்நாட்டு வெளிநாட்டு கடனட்டை மோசடி கும்பல்களிடமிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

கடனட்டைகளின் தரவுகளை சட்டவிரோதமான முறையில் திரட்டி பணத்தை மோசடி செய்வோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக போலித் தகவல்களை வழங்கி கடனட்டை தொடர்பான தகவல்களை திரட்டும் நபர்கள் பற்றிய தகவல்களையும் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்

மேலும் சிலர் கடனட்டைகள் தொடர்பான தகவல்களை பெற்று போலிக் கடனட்டைகளில் அந்தத் தரவுகளை உள்ளடக்கி பணத்தை வசூலிக்கும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இந்தியப் பிரஜை ஒருவர் அண்மையில் கட்டுநாயக்க விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்த தரவுகள் உள்ளடக்கப்படாத 110 கடனட்டைகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடனட்டைகளுக்கு தரவுகளை உள்ளடக்கும் உபகரணம் மற்றும் மடிக் கணினி என்பவற்றையும் குறித்த இந்தியப் பிரஜையிடமிருந்து அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நிலையில் கடனட்டை தரவுகளை திருடும் குழுவினரின் செயற்பாடுகள் நாட்டில் அதிகரித்திருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கால்நடைகளை கட்டி வளர்க்க அறிவுறுத்தல்

வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளான நாய், ஆடு, மாடு போன்றவற்றைக் கட்டி வளர்க்குமாறு யாழ். மாநகர சபையால் ஒலிபெருக்கி வாகனத்தில் வெள்ளிக்கிழமை அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கட்டாக்காலிகளாக வீதிகளில் அலையும் பிராணிகள் யாழ். மாநகரசபையால் பிடித்துச் செல்லப்படுவதுடன், உரிமையாளர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு தண்டப்பணம் அறவிடப்படுமென்றும் மேற்படி அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டது. (68)

# வலிகாம கல்வி வலய ஆசிரியர் தின விழா

(வலிகாமம்)

வலிகாம கல்வி வலய ஆசிரியர் தினவிழா நேற்று முன்தினம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றது. இதில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் பீட பேராசிரியர் மா.சின்னதம்பி பிரதம விருந்தினராகவும், யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் உதயகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். நிகழ்வில் வலயத்திற்கு உட்பட்ட சிறந்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். அதேவேளை ஆசிரியர் மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (17)

# கணிதபாட செயற்றிட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்-4 இல் கற்கும் மாணவர்களுக்கான கணித பாடச் செயற்பாட்டு நிகழ்வுகள் 4 மத்திய நிலையங்களில் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, மட்டுவில் மகா வித்தியாலயம் ஆகிய மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ள இக்கணித செயற்பாட்டிற்குப் பெற்றோருடன் உரிய நேரத்திற்கு வருகை தருமாறு தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (11)

# முல்லையில் நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் முல்லைத்தீவு கரைத் துறைப்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து இறுதி யுத்தத்தின் போது சட்ட ஆவணங்களை இழந்தவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான இலவச நடமாடும் சேவை கடந்த 3 ஆம், 4ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இந்நடமாடும் சேவையில் மேற்படி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.


இதில் 200 தேசிய அடையாள அட்டைக்கான சேவைகளும் 697 இறப்பு, பிறப்பு, திருமணப் பதிவுகளுக்கான விண்ணப்பங்களும் பெறப்பட்டதுடன் 220 முதியோர் அடையாள அட்டைக்கான சேவைகள் என்பன பெற்றுக் கொடுக்கப்பட்டது.

மேலும் 52 பொலிஸ் அறிக்கைகள், 140 சட்டத்தரணியின் சேவைகள், 8 திடீர் மரண விசாரணை அறிக்கை என்பனவும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

தமிழ், முஸ்லிம் திருமணப்பதிவுகள் 34 பேருக்கும், காலம் கடந்த பழைய பிறப்பு பதிவு 15 பேருக்கும், காலங்கடந்த இறப்புப்பதிவு 26 பேருக்கும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை இச்சேவையை வழங்கும் வகையில் போட்டோ பிரதி சேவையும் இடம் பெற்றதுடன் 600 போட்டோ பிரதிகள் மக்களுக்கு இலவசமாக தேவைக்கேற்ப பெற்றுக் கொடுக்கப்பட்டது. அத்துடன் முத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டது.

இச்சேவை மூலம் சட்ட ஆவணங்களை இழந்த மக்கள் அவற்றை இலகுவாகப் பெற்றுக் கொண்டனர். (04)




# ஆசிரியர்களது கடமைகளும் பிரச்சினைகளும் சில புதிய அவதானங்கள்

**மனிதவள விருத்திக்கு ஆசிரியர்களின் பங்கு மிக அடிப்படையானது. அவர்க்ள் தமது கடமைகளைப் பொறுப்புணர்வுடன் மேற்கொள்வதும், பாடசாலையின் விளைவுகளுக்கு வகைகூறுவதும் அவசியமாகின்றது. ஊக்கத்துடன் கடமைகளையும், பொறுப்புக் களையும் நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கான உளவியல் ஊக்கம் போதியளவில் வழங்கப்படவேண்டும். சுதந்திரமும் சமூக அந்தஸ்தும் அங்கீகரிக்கப்படவேண்டும்.**

பேராசிரியர் மா.சின்னத்தம்பி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை 1948 இல் சுதந்திர மடைந்த போதிலும் 1945 இல் இருந்தே அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக் கழகப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படலாயிற்று. இதே ஆண்டில் சிங்களமும், தமிழும் போதனா மொழி களாயின. பள்ளிச் சிறார் களுக்கு நண்பகல் உணவு வழங்கும் ஏற்பாடும் 1945 இல் தொடங்கி 1950 இல் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. வறிய பிள்ளைகளுக்குத் திறமையடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. 1962 இல் பெரும்பாலான தனியார் முகாமைத்துவ பாடசாலைகள் அரசுடைமையாகின. 1993 இல் இலவச சீருடை வழங்கும் ஏற்பாடும் தொடங்கியது. 1980 இலிருந்து இலவசபாடநூல்கள் வழங்கப்படலாயின. பள்ளி மாணவர்களுக்கு சலுகை அடிப் படையில் பயணத்துக்கான பருவகாலச் சீட்டுக்கள் வழங் கப்படலாயின.

இவ்வாறு இலங்கையின் பாட-சாலை முறைமை நலன்புரி முறைமை யாகவே தென்படுகின்றது. வீடுகளை விடவும் பாடசாலைகள் உயர்வானவை; உன்னதமானவை; பாதுகாப்பானவை என்ற புலக்காட்சியைப் பேணுவதில் அரசாங்கம் அதிக அக்கறை கொண்டுள்ளது. இது பெருமைப்படத்தக்கது.

ஆயினும் கல்வி இலங்கையின் அபிவிருத்திக்கான மனிதவளத்தை விருத்தி செய்வதில் முக்கிய பங்கை வகிப்பது மிக மிக அவசியம்.

அத்தகைய மனிதவள விருத்திக்கு ஆசிரியர்களின் பங்கு மிக அடிப்படையானது. அவர்கள் தமது கடமைகளைப் பொறுப்புணர்வுடன் மேற்கொள்வதும், பாடசாலையின் விளைவுகளுக்கு வகைகூறுவதும் அவசியமாகின்றது. ஊக்கத்துடன் கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கான உளவியல் ஊக்கம் போதியளவில் வழங்கப்பட வேண்டும். சுதந்திரமும் சமூக அந்தஸ்தும் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால், ஆசிரியர்கள் பரபரப்புடனும், பொருளாதார நெருக்கடிகளுடனும், மன அழுத்தங்களுடனும், தொழிலிடம் பற்றிய நிச்சயமின்மைகளுடனும் தமது தொழில் அந்தஸ்து சார்ந்த அறைகூவல்களுடனுமே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

## தொகையும் பல்தர நிலைமையும்

இலங்கையில் அரச பாடசாலைகளில் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் பெண் ஆசிரியர்கள் 69 சத வீதம் வரையில் உள்ளனர். இதனால் பெண்களது துறையாகவே இது இனங்காணப்படுகின்றது. பாடசாலைக் கல்வியில் சாதனையாளர்களாக தொடர்ந்து விளங்குபவர்களும் பெண் மாணவர்களே.

பட்டதாரிகளுக்கு எழுந்தமானமாக தொழில் வாய்ப்பை உருவாக்குவதற்கு கைகொடுக்கும் தொழில் வழங்கும் துறையாகவும் கல்வித்துறையே பயன்படுத்தப்படுகின்றது. சான்றிதழ், டிப்ளோமா, கற்பித்தல் பயிற்சித்தகைமை, பட்டம், பட்டப் பின் டிப்ளோமா, முதுமாணி போன்ற பல்வகையான கல்வி மற்றும் பயிற்சித் தராதரங்களுடன் இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் நாடு முழுவதும் பணிபுரிகின்றனர். எண்ணிக்கை பெருகும் போது வேலைத்தர உறுதிப்பாடு பாதிக்கப்படுகின்றதென்று கூறப்படுவதில் உண்மையுண்டு.

இலங்கையில் சராசரியாக 19 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருப்பதாக புள்ளிவிபரக் கணிப்பீடு கூறுகின்றது. 1993 இல் 23 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியரே இருந்ததாக கணிப்பிடப்பட்டது. ஆனால், ஆசிரியர்கள் தொடர்பாக பல நெருக்கடிகள் மற்றும் சவால்கள் தீர்வுக்காக முனைப்படைந்து காணப்படுகின்றன. அவற்றுள் சில;

- ஆசிரியர்களிடம் கல்வித்தகைமைக்குரிய சான்றிதழ்கள் பெறும் ஊக்கம் அதிகரிக்கிறது. ஆனால் அந்தள்வுக்கு மாணவர் தராதரங்களை அவர்களால் உயர்த்த முடியவில்லை.
- ஆசிரியர்களிடம் அறிவு தொடர்பான அடைவு திருப்திகரமாகவுள்ளது. ஆனால், அதனை வினைத்திறனுடன் மாணவர்களுக்கு கைமாற்றுவதற்கான தேர்ச்சிகளும், திறன்களும் உயரவில்லை.
- மாற்றுக் கல்வி நிறுவன ஆசிரியர்களைவிட அரச பாடசாலை ஆசிரியர்களுக்கான வழிகாட்டல், பயிற்சி, கண்காணிப்பு, தொழில்வாண்மை வழி காட்டல் என்பன அதிகம். ஆனால் மாற்றுக்கல்வி ஆசிரியர்களுக்கு கிடைக்கும் அளவு பொருளா-தார வருமானங்களோ, சுதந்திரமோ, சமூக அந் தஸ்தோ அரச பாடசாலை ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை.
- பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் தெளிவான அறிவையும், பொருத்தமான திறன் களையும், உயரிய விழுமியங்களையும் கற்பித்தல் மூலமாகவும், வழிகாட்டல், மதியுரை மற்றும் ஊக்குவித்தல் மூலமாகவும் வழங்கி வருகின்றனர். ஆனால், மாற்றுக்கல்வி நிறுவனங்களில் கற்பிப்போர் பாட அறிவையும், சோதனைகளுக்குரிய தயாரிப்பு உதவிகளையுமே வழங்குகின்றனர். பாடசாலை ஆசிரியர்களினால் அவர்கள் அளவுக்கு சமூக நம்பிக்கையைப் பெற முடிவதில்லை.
- பட்டங்கள் பெற்ற பின்பும் ஆசிரியர்கள் தொழில்வாண்மைத் தகைமைபெறுவதற்கு பல வருடங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. பல சமயங்கள் போட்டிப் பரீட்சைகளில் தோற்றுவதற்கான புதிய நிபந்தனைகளினால் அவர்கள் சிரமப்படுகின்றனர்.

மாற்றுக்கல்வி நிறுவனங்களில் தொழில்வாண்மைத் தகுதி பெறாதவர்கள் பெருந்தொகையான மாணவர்களுக்கு கற்பித்து புகழ்பரப்பி நிற்பதையும் அரசும் சமூகமும் அங்கீகரித்து வருகின்றன.

- ஆசிரியர்களது மெய்வருமானத்தை உயர்த்துவதன் நியாயப்பாடு உணரப்பட்டுள்ளது. இதன்படி சம்பளப் படிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால் தமக்குரிய இத்தகைய படிகள் நியாயமின்றி தாமதிக்கப்படுவதாக 82 வீதம் ஆசிரியர்கள் கூறியதாக ட்ரான்ஸ் பேரன்சி இன்டர்நஷனல் நிறுவனம் தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளது. (2009)
- ஆசிரியர்கள் தமக்குரிய படிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலிகிதர்களுக்கு இலஞ்சம் வழங்கியதாக 10 வீத ஆசிரியர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். (மேற்படி ஆய்வு 2009)
- பெரும்பாலான ஆசிரியர்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சம்பளத் தொகை குறைவாக இருந்ததாலும், சம்பள உயர்வைப் பெறுவதில் தாமதங்கள் ஏற்பட்டதாலும் விரக்தியுடனேயே பணியாற்றுகின்றனர்.
- அதிக ஊக்கத்துடன் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும் என்று உரத்த குரலில் சொல்கின்ற பெற்றோரும், ஊடகங்களும் ஆசிரியர்களின் விரக்தியை போக்குவது பற்றி ஒரு போதும் கரிசனை கொண்டதில்லை.
- 2007 இடமாற்றக் கொள்கையின் படி (2007/20 – 2007/12/13) கஷ்டப்பிரதேசத்தில் 3 - 5 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும். அவர்கள் இதற்கான மேலதிகப்படி (கஷ்டப்பிரதேசப் படி)க்கு உரித்துடையவர்கள். ஆனால் 46 வீதமான ஆசிரியர்கள் இத்தகைய படி தமக்கு வழங்கப்படவில்லையென கூறியதாக ட்ரான்ஸ் பேரன்சி இன்டர்நஷனலின் ஆய்வறிக்கை குறிப்பிடுகின்றது. இதனை உரிய காலத்தில் பெறுவதற்கு அரசியல் செல்வாக்கு தேவைப்படுவதாகவும் கூறியுள்ளனர்.
- கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிவோர் மாதாந்தம் பயணங்களுக்காக 5000 ரூபா வரை செலவிடுகின்றனர். உணவு, தங்குமிட கொடுப்பனவுகளையும் மேற்கொள்கின்றனர்.

இதன் காரணமாக அவர்கள் பின்வரும் செயல்களுக்குத் தள்ளப்படுகின்றனர்.

1) தனியார் வகுப்புக்களை நடாத்துகின்றனர்.

2) தனியார் வகுப்பு நடாத்தும் ஆசிரியர்களிடம் கடன் பெறுகின்றனர்.

## ஆசிர்யர்களைப் புரிந்து கொள்வோமா?

அரச பாடசாலை ஆசிரியர்களின் எதிர்முனைகளில் நின்றுகொண்டு அறிவுறுத்தல்களை வழங்குதல், கண்டனம் செய்தல், அவமரியாதை செய்தல், கேலி செய்தல் என்ற செயல்களிலிருந்து சமூகமும், ஊடகமும் சற்றுத் தள்ளி நின்று அவர்களை உணர்ந்து - புரிந்து கொள்ளவேண்டும்.

அவர்களது துயர்களையும், மன அழுத்தங்களையும், ஊமையாய் உள்ளே புலம்புவதையும் உணர்ந்து கொள்ளவும் வேண்டுமல்லவா?

எங்கள் குழந்தைகளைப் பெரிய மனிதர்களாக வளர்த்துத் தரும்படி அவர்களை நோக்கி அனுப்புகிறோமல்லவா? இதனால் அவர்களது துயரநிழல்களை நேர்மையுடன் பார்த்து அவர்களுக்காகவும் சிந்திப்போம், குரல் கொடுப்போம்.

ஊடகங்களும், பெற்றோரும் தங்கள் பார்வைகளில் நடுநிலையைக் கொண்டு வரவும், ஆசிரியர்களுக்காக சமூகச் கருத்துக்களை செப்பனிடவும் இந்த ஆசிரியர் தினத்தைப் பயன்படுத்தினால் என்ன?

நல்லதை விதைப்போம்: நன்மைகளை அறுவடை செய்வோம்.

# மக்களின் உரிமைகளை நசுக்க எவருக்கும் உரிமை கிடையாது



(கொழும்பு)

மக்களின் ஏக உரிமைகளை நசுக்குவதற்கு அல்லது பறித தெடுப்பதற்கு எவருக்குமே உரிமை கிடையாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியன அதிகாரப் போக்குடன் அல்லாது, மக்கள் சேவையின் பொருட்டு செயற்பட வேண்டும்.

சப்ரகமுவ மாகாண சபைக கேட்போர் கூடத்தில் நடைபெறற இரத்தினபுரி மாவடட அபிவிருத்தி மீளாய்வு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களில் அனைதது தரப்பினதும் இணக்கத்துடன் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

இதன்போது தத்தமது பொறுப்புக்களில் இருந்து வீலகி செயற்பட எவராலும் முடியாது.

அரசியல் வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்படாத பட்சத்தில், அதன் பிரதிபலனாக பெருமபாலான மக்களின் நலன்களுக்காக அரசாங்கத்தினால் முனனெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் செயலிழக்கக்கூடும்.

இவ்வாறான ஒரு நிலைமையை நாட்டினுள் தோற்றுவிப்பதற்காக எவருக்குமே உரிமை கிடையாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜோர்தானில் உணவு விசமானது 130 இலங்கைப் பெண்கள் பாதிப்பு



ஜோர்தானில் பணிப்பெண்களாக கடமையாற்றும் 130 பெண்கள் உணவு விஷமடைந்ததால் பாதிக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பில் கேணல் பரீட் அல் ஷாரா கூறுகையில்,

பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை தற்சமயம் தேறி வருகிறது. விடுதி ஒன்றில் உணவருந்திய 130 பணிப் பெண்கள் வயிற்றுக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் அம்மானில் உள்ள 3 மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சையின் பின்னர் இவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்வதா அல்லது பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்புவதா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று கூறினார்.

## இலங்கை யானைக் குட்டிகளுக்கு பராகுவேயில் குடியுரிமை

செக்குடியரசின் பராகுவே மிருகக்காட்சிசாலைக்கு இலங்கையிலிருந்து பெண் யானைக் குட்டிகள் இரண்டு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி இரு யானைக் குட்டிகளும் நேற்றுமுன்தினம் தமது நாட்டை வந்தடைந்ததாகவும் இலங்கை இராணுவம் தனது விசேட விமானம் மூலம் அவ் யானைக்குட்டிகளைக் கொண்டுவந்து கையளித்ததாகவும் பராகுவே மிருகக்காட்சி சாலையின் பணிப்பாளர் மிரோஸ்லவ் பொபெக் தெரிவித்துள்ளார்.

பின்னவல யானைகள் சரணாலயத்தைச் சேர்ந்த 8 வயதான ஜெனிட்டா மற்றும் 7 வயதான தமாரா ஆகிய இரு யானைக் குட்டிகளுமே இவ்வாறு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, மேற்படி யானைக்குட்டிகளுக்கு பதிலாக செக் குடியரசிலிருந்து இரு கொமடோ டிராகன்கள், பிரஸ்வால்ஸ்கி குதிரைகள் மற்றும் இரு நீர் யானைகள் இலங்கைக்கு அன்பளிப்பு செய்யப்படவுள்ளன என்று பராகுவே மிருககாட்சிசாலையின் பணிப்பாளர் மேலும் கூறினார்.

## பாடசாலை போக்குவரத்திற்கு முறையான கட்டணத் திட்டம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதாக தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

உத்தேச ஒழுங்குப்படுத்தல் நடைமுறைக்கு அமைய அங்கீகரிக்கபட்ட வாகனங்களையும் சாரதிகளையும் மாத்திரம் பாடசாலை போக்குவரத்து சேவைகளுக்காக பயன்படுத்த முடியும். மேலும் அநாவசியமான முறையில் பணம் வசூலிக்கப்படுவதை தடுப்பதற்கும் பாடசாலைப் போக்குவரத்து சேவைகளுக்கு முறையான கட்டணத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவும் எதிர்ப்பார்த்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பாடசாலை போக்குவரத்து வாகனங்கள் விபத்துக்களில் சிக்குவதை குறைத்துக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மருத்துவ மாணவர்களுக்கு இருமொழிப் பயிற்சிகள்




(கொழும்பு)

மருத்துவ மாணவர்களுக்கான இருமொழிப் பயிற்சிகளை வழங்குவதற்கு அரசகரும மொழிகள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பாக கல்வி உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க தெரிவித்துள்ளார்.

நோயாளர் ஒருவர் தனது தாய்மொழியில் நோய்க் காரணிகளை தெளிவுபடுத்துவதற்கு ஏற்ற வகையில் வைததியர்கள் தேரச்சி பெறச்செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் சேவையாற்றுவதற்காக சிங்கள வைத்தியர்களை அமர்த்தும் போதும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் தமிழ் வைத்தியர்களை சேவைக்கு அமர்ததும் போதும் ஏற்படுகின்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகவே இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத்தகைய சிக்கலான நிலைமைகள் குறித்து எமககு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

இதற்கமைய மருத்துவ கல்லூரியில் பட்டப்படிப்பை நிறைவுசெய்வதற்கு முன்னதாக மருத்துவ மாணவர்களுக்கு மொழி தொடர்பான அறிவைப் பெற்றுக்கொடுப்பறகு இதன் மூலம் திட்டமிடப் பட்டுள்ளது.

மருத்துவ பட்டப்படிப்பிற்காக இருமொழி தேர்ச்சி மறறும் பயிற்சிகளின்போது சமுகமளிக்கின்ற விகிதாசாரம் என்பவற்றை கவனத்திற் கொள்ளுமாறு உயர்கல்வி அமைச்சுககு ஆலோசனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படடுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பணிப்பகிஷ்கரிப்பு முடிவுற்றதும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள்

(கொழும்பு)

தமது பணிப் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தவுடன் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் இணையவுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சின் செயலாளருடன் இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளின்போது இணக்கப்பாடு ஏற்பட்டால் பணிப் பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டு வரப்படும் என சம்மேளனத்தின் செயலாளர் டெரன்ஸ் மதுஜித் கூறியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்தத் தர்மானங்களை மேற்கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இன்றைய தினம் ஏற்படுத்திக்கொள்ளப்படும் இணக்கப்பாடுகள் தொடர்பில் தமது உறுப்பினர்களை தெளிவுபடுத்தி அவர்களுடைய கருத்துக்களை கேட்டறிந்த பின்னரே பணி பகிஷ்கரிப்பு கைவிடப்படும் எனவும் டெரன்ஸ் மதுஜித் கூறியுள்ளார்.

விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டால் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வரும்.

கலவித் துறைக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதி தொடர்பான தமது சம்மேளனத்தின் நிபந்தனைக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கும் இடையே கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றது.

எவ்வாறாயினும் இந்த முரணபாடுகளை பணிப்பகிஷ்கரிப்பை முடிவுக்கு கொண்டுவரும் விடயத்துடன் தொடர்புபடுத்தாமல் இருப்பதறகு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் மொத்த உற்பத்தியில் ஆறு வீதத்தை கல்வித்துறைககு ஒதுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்றார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடனான சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நாட்டுக்கு நன்மையளிக்கும் வகையில் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே தமது நோக்கம்.

இந்த இலக்கை அடைவதற்காக விரிவுரையாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் தாம் மத்தியஸ்தம் வகிப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## வாக்காளர் பதிவேடு தொடர்பில் ஆட்சேபனை தெரிவிக்க அவகாசம்




(கொழும்பு)

2012 ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவேட்டில் புதிதாக பெயர் உள்ளடக்கப்பட வேணடியவர்களுக்கான உரிமைக் கோரிக்கை மற்றும் பெயர் நீக்கப்பட வேண்டியவர்கள் குறித்து ஆட்சேபனை தெரிவிப்பதற்கும் தேர்தல்கள் செயலகம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல சேகரிக்கப்பட்ட பெயர் விபரங்களின் அடிப்படையில் புதிய வாக்காளர் பதிவேடுகள் தயாரிக்கும் பணிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் வாககாளர் பதிவேட்டில் புதிதாக உளளடக்கப்பட வேண்டியவர்களின் பெயர்களுக்கான உரிமைக் கோரிக்கைக்கான படிவத்தையும் பெயர் நீக்கப்பட வேண்டியவர்கள் தொடர்பில் ஆட்சேபனைத் தெரிவிப்பதற்கான படிவத்தையும் அனைத்து கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும் பெற்றுகொள்ள முடியும்.

புதிய வாக்காளர் பதிவேட்டு விபரங்களுடன் நடைமுறையிலுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேடும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் கடந்த 4 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்க விசேட பயிற்சி




(கொழும்பு)

சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட பயிற்சிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பிலான மூன்று நாள் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் ஆரம்மானதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தெரிவிககின்றது.

சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 30 இளைஞர நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றியுள்ளனர்.

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கு இளைஞர்களால் நிறைவேற்றவேண்டிய பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்து இளைஞர் நாடாளுமன்ற உறுபபினர்களுக்கு அடிப்படை புரிந்துணர்வை பெற்றுக்கொடுப்பது இதன் நோக்கமாக அமைந்துள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சு ஆகியன கூட்டாக ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு இன்ற நிறைவடையவுள்ளது.

# மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் முச்சக்கரவண்டி சேவை அமையவேண்டும்



(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கு பாதுகாப்பும் நம்பிக்கையும் ஏற்படுத்தும் வகையில் முச்சக்கரவண்டிகளின் சேவைகள் அமையப் பெற வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவை தலைமைக்காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முச்சக்கரவண்டிகளுக்கு கட்டணஅறவீட்டு மீற்றர் பொருத்தும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களுக்கு பாதுகாப்பு நம்பிக்கை ஏற்படுத்துவது மட்டுமல்லாது வாடகைச் சேவையில் ஈடுபடும் சகல முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் தமது வாழ்வாதார மேம்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இதன் பிரகாரம் கட்டண அறவீட்டு மீற்றரைப் பொருத்துவதனூடாக பொதுமக்கள் விரைவானதும் நம்பிக்கையானதும் பாதுகாப்பானதுமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சேவையில் ஈடுபட வேண்டுமென்றும் போக்குவரத்து நடைமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன்(கமல்) குடாநாடு தழுவிய ரீதியில் முச்சக்கரவண்டி சங்கங்களை ஒருங்கிணைத்து அவற்றை ஒரு சிறந்த கட்டமைப்புக்குள் ஒழுங்குபடுத்துவது மட்டுமன்றி வாடகை சேவையில் ஈடுபடுவோரின் நலன்களைக் கருத்தில் கொண்டுமே இம் மீற்றர் சேவை நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கட்டண அறவீட்டு மீற்றர் கருவியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சங்கத்தலைவர் போல் ஜெயகாந்தனிடம் கையளித்ததைத் தொடர்ந்து முச்சக்கர வண்டியொன்றில் மீற்றர் பொருத்தப்பட்டதுடன் அதில் பயணம் செய்து சேவையை சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

இதன்பிரகாரம் முதலாவது ஒரு கிலோ மீற்றருக்கு 70 ரூபாவும் பின்பு தொடரும் ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் 40 ரூபா வீதமும் அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் போது யாழ்.மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராசா யாழ்.மாநகர சபை உறுப்பினர் சுபியான் ஆகியோர் உடனிருந்தனர்.

## பரமர் சங்கமம்



'ஒருபுறம் வேடன், மறுபுறம் நாகம். இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான் இரண்டு எஜமானர்களின் நடுவே மாட்டிக் கொண்டுள்ள ஒருவரின் இக்கட்டான நிலையை அழகாக இந்தப் பாடல் சுட்டிக்காட்டுகிறதல்லவா ?

இப்பொழுதெல்லால் நாட்டில் பல சட்டங்கள் புதிது புதிதாகப் பிறப்பிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் சில வேடிக்கையானது. வேறு சில மிகவும் வேண்டிய விசயங்கள்தான்.

சட்டங்கள் பொதுவாக மக்களுக்காகத்தான் தோன்றுகின்றன. அதுவே மக்களுக்கு இடைஞ்சலாக அமைந்து விடுவதையும் அனுபவிக்க நேர்கையில் உணரவும் முடிகிறது.

'மனைவியுடன் சேர்ந்து செல்வதும் குற்றம' இவ்விதமாகவும் ஒரு செய்தி வெளிவந்தது. மனைவியைக் கற்பழித்ததாகவும் கோர்ட்டில் வழக்கு நடந்தது. இதுகளெல்லாம் மேலோட்டமாக எம்மிடையே வியப்பை வரவழைக்கக்கூடிய தகவல்கள்.

இதனிடையே எங்கட நாட்டில் 18 வயதுக்கும் குறைந்த இளைஞனுக்கு 'சிகரட' விற்பனை செய்த வியாபாரிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தலா நாலாயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டதாகவும் செய்திகளைப்பாத்தோம்.

அதேவேளை கடந்த வாரங்களில் வவுனியாவில் வெறியுடன் சென்ற இரு 18 வயதுக்குக் குறைந்த இளைஞர்களுக்கு 'சிகரட்' விற்பனை செய்ய மறுத்த வயோதிப வர்த்தகர் அவ்விருவராலும் கல்லால் எறிந்து, குத்திக் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தியையும் பார்க்க நேர்ந்தது.

அவ்வேளையே மேற்சொன்ன பாடல் நினைவுக்கு வந்தது. 'சிகரட' அவர்களுக்கு விற்பனை செய்தால் அரசகுற்றம் செய்த குற்றவாளியாகித் தண்டம் கட்ட நேரிடும்.

போதையில் இருந்த இளைஞர்களுக்கு 'சிகரட' வைத்துக் கொண்டு கொடுக்க மாட்டேனெண்ட வியாபாரி கொல்லப்பட வேண்டிய குற்றத்தைச் செய்ததாகப் படுகிறது. உலக நடைமுறையில் இத்தகைய சிக்கல்களைத் தோற்றுவிக்கக் கூடிய சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதால் அதனை நடைமுறைப்படுத்தவும் முடியாமல் திணறும் நிலை உருவாகிறது.

வீதிகளில் மதுபோதையில் நின்றவர். 1500 ரூபாவை இழந்தார். வீதியில் குப்பை கொடடியவர் 5ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார். இவ்வகைச் செய்திகளையும் நாளாந்தப் பத்திரிகைகளில் பார்க்கத்தான் செய்கிறோம்.

ஆயினும் வீதியில் குப்பை கொட்டும் காட்சிகளையும், மது போதையில் மற்றவர்களுக்கு இடையூறு செய்கின்ற பிரகிருதிகளையும் நாளாந்தம் கண்டு கொண்டுந்தான் இருக்கிறோம்.

வாகனங்களில் செல்கையில் கையடக்கத் தொலைபேசியில் உரையாடிச் செல்வதும் கூட தடை செய்யப்பட்டுள்ளது. படித்த நாகரிக உடைகளை உடுத்திச் செல்கின்ற உந்துருளி, ஈருருளி, மோட்டார் வாகன சாரதிகள் இன்னமும் அதனைக் கைவிடவில்லை.

சட்டம் இப்பொழுதெல்லாம் எப்பொழுதும் யார் யார் கைகளிலோ அகப்பட்டு அல்லாடுகிறது. என்றால் இடையில் அகப்படும் அப்பாவிகள் அழகிய கலைமான்களோ சொல்லுங்க பாப்பம்...

## அபிவிருத்திக் கூட்டம்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று திங்கட் கிழமை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பரிசீலனை செய்யப்படவுள்ளதுடன் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது. (பா)

## கோரிக்கை

வரணிப் பிரதேசத்தில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் மாற்று வலுவுடையோரிடம் இருந்து விபரங்கள் புகைப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் விபரங்களையும் புகைப்படங்களையும் உரியவர்கள் உறுதிப்படுத்தி வழங்கினால் உதவிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (150)

# புகையிரதப் பாதை துரித கதியில்

(சுன்னாகம்)

ஓமந்தையில் இருந்து மாங்குளம் வரையிலான புகையிரதப் பாதை வேலைகள் துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் மாங்குளம் புகையிரத நிலையத்தின் கட்டடக் கட்டுமானப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக புகையிரத நிலைய ஊழியர்களுக்கான விடுதிக் கட்டட வேலைகள் தற்போது பூர்த்தியாகும் நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் கிளிநொச்சி வரையிலான புகையிரதப் பாதை துப்புரவுப் பணிகளும் நடை பெற்று வருகின்றன. (148)

# மழலைகள் முன்பள்ளியின் சிறுவர் தின விழா

(ஆனைக்கோட்டை)

வலி. தென்மேற்கு பிரதேச முன்பள்ளி மழலைகளின் சிறுவர் தின விழா கடந்த வெள்ளிக்கிழமை வலி.தென் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்ப பிள்ளை அபிவிருத்திப் பிரிவு கல்விப் பணிப்பாளர் செல்வி.ஏ.ஆர்.தம்பையா, கௌரவ விருந்தினராக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், சிறப்பு விருந்தினராக வலி.தென் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி. புஸ்பமலர் சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகபட்டதாரி பயிலுனர்களின், 'விடியலைத் தேடி' என்ற விழிப்புணர்வு நாடகமும் ஆற்றுகை செய்யப்பட்டது. (104)

# முரசின் இன்றைய பலன்

[08.10.2012 – திங்கட்கிழமை]

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 22 ஆம் திகதி.
நட்சத்திரம்: திருவாதிரை முற்பகல் 8.14 வரை பின் – புனர்பூசம்.
சித்தாமிர்தம் – திதி: அட்டமி முன்னிரவு 10.25 வரை பின் நவமி.
இராகுகாலம் 7.32 – 9.02 வரை. சுபநேரம் 12.02 – 1.32 வரை
எமகண்டம் 10.32 – 12.02 வரை, குளிகன் காலம் 1.32 – 3.02 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதிய வேலையில் ஈடுபாடு. உபரி வருமானம். கலைத்துறையினருக்கு நன்மை. சுபச் செலவு. சுற்றத்தாரின் சந்திப்பு கிட்டும். கூடுதல் உழைப்பு. குடும்பத்தில் குதூகலம். |
| ரிஷபம் | கருணையும் உதவியும். தாராள பணவரவு. துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி. கூட்டு முயற்சிகளில் வெற்றி. வழிபாடும் அறப்பணியும். |
| மிதுனம் | பயணங்களால் பலன். கலைத்துறையினர் மேன்மை. கடன் வசூலாகும். தொழிலில் எச்சரிக்கை தேவை. எதிர்பாராத சந்திப்பு. வரவும் செலவும் சமம். உறவினர் உதவி. |
| கடகம் | ஆதாயம். எதிர்பாராத சன்மானம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி. பொருளாதாரம் செழிப்பு. உற்சாக நாள். வேண்டாதவர்களை இனம் காண்பீர்கள். குடும்ப நன்மை. |
| சிம்மம் | குடும்பத்தில் வீண் வாக்குவாதம். அலைச்சல். மருத்துவச் செலவுகள். காரியங்கள் இழுபறி. போராடி இலாபம் ஈட்டுவீர்கள். நாவடக்கம் மிகத்தேவை. கேளிக்கை வேண்டாம். |
| கன்னி | நிலபுலன்களால் ஆதாயம். தொழிலில் நற்பலன்கள். எதிர்பாராத பணவரவு. உடல்நலம் சீராகும். சேமிப்பு. கணவன் – மனைவி கசப்பு நீங்கும். பிள்ளைகள் நற்செய்தி. |
| துலாம் | மனநிலை சீர். பெற்றோர் நலத்தில் அக்கறை. கலைத்துறையினர் சிறப்பு. பாராட்டு, புகழ் ஓங்கும். புதியவர்கள் அறிமுகம். பொருட்கள் வாங்குவீர்கள். திடீர் பயணம் ஏற்படலாம். |
| விருச்சிகம் | உழைப்பு வீண் போகாது. வாகன கஷ்டம் ஏற்படலாம். குடும்பத்தில் சுபகாரியங்கள். வெற்றிகள் வரும். இனிமையான நாள். இல்லத்தினர் தேவை பூர்த்தி. செலவு இருக்கும். |
| தனுசு | பெரியோரின் ஆசி. பெற்றோரின் ஆதரவு. பழைய கடன் தீரும். நட்புக்கு விட்டுக் கொடுப்பீர்கள். புதுத் தொழில். மதிப்புக் கூடும். குடும்பத்தில் நல்லுறவு. சமூகத்தில் உயர்வு. |
| மகரம் | சோதனைகள் இருக்கும். நம்பிக்கையால் வெற்றிகள் கிட்டும். நிலம், வீடு, வாகன பிரச்சினைகள் வந்து, தீரும். இல்லத்தில் குழப்பம். உறவினர் உறுதுணை. பொறுமை நன்மை. |
| கும்பம் | பொறுப்பும், சுமையும் அதிகரிக்கும். சகிப்புடன் உழைக்க பலன். விருந்தினர்கள் வரவேற்பு. வருமானம் இரு மடங்காகும். வருங்கால நலனில் அக்கறை. மறதி ஏற்படும், கவனம். |
| மீனம் | பொருள் வர தாமதமாகும். காரியத்தடை ஏற்படக்கூடும். மங்கல நிகழ்ச்சிகளுக்கு அழைப்பு. லாபம் இல்லை. தொழிலில் புதிய முயற்சி. எதையும் இழந்துதான் பெறவேண்டும். |



சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) உயரதிகாரிகள் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடினர். இச்சந்திப்பில் கிரிக்கெட் தொடர்பான நுணுக்கமான சில விடயங்களை ஜனாதிபதி கேட்டறிந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சச்சின் டெண்டுல்கர் மீது விமானப் படை அதிருப்தி

(புதுடில்லி)

நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் மீது இந்திய விமானப்படையினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட்டின் சகாப்தம் என்று அழைக்கப்படுபவர் சச்சின் டெண்டுல்கர். பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளார். விமானபடையில் கௌரவ பதவி பல சாதனைகளை புரிந்த டெண்டுல்கரை கௌரவிக்கும் விதமாக இந்திய விமானப்படை (ஐ.ஏ.எப்) குரூப் கப்டன் என்ற கௌரவ பதவியை வழங்கியது.

2010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அவருக்கு விமானப்படையில் கௌரவ பதவி கொடுக்கப்பட்டது. இந்திய விமானப்படையின் தூதுவரான அவர் விமானப்படை மேம்பாட்டு பணியில் ஈடுபடவில்லை என்று கூறி விமானப்படை அதிருப்தி தெரிவித்துள்ளது. இது குறித்து இந்திய விமானப்படையின் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

விமானப்படையில் கௌரவ பதவி பெற்ற பின்னர் டெண்டுல்கர் மேம்பாட்டுப் பணிக்காக இதுவரை எங்களிடம் எதுவும் கேட்டது இல்லை. அவரது பங்களிப்பு எதுவும் இல்லை. ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற சாய்னா நேவால் சமீபத்தில் கிரண் எம்.கே 2 பயிற்சி விமானத்தில் பறந்தார். இதற்காக அவரைப் பாராட்டுகிறோம்.

ஆனால் டெண்டுல்கர் இதிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகிறார். இனி நாங்கள் யாருக்கும் கௌரவ பதவி வழங்குவது இல்லை என்று தற்போது முடிவு எடுத்துள்ளோம் என்றார்.

பல நிறுவனங்களின் விளம்பரப் படங்களில் நடித்து வரும் சச்சின் ஒரு வருடத்தில் 100 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆடுகளம் தகுதியில்லை ஐ.சி.சி.யும் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதிய அரையிறுதிப் போட்டியில், பயன்படுத்தப்பட்ட ஆடுகளம், ருவென்ரி-20 போட்டிக்கு ஏற்றதாக இல்லை என, ஐ.சி.சி., குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையில் நடக்கும் நான்காவது ருவென்ரி-20 உலக கோப்பை தொடரின் முதல் அரையிறுதி, கொழும்பு பிரேமதாசா மைதானத்தில் நடந்தது. இதில் இலங்கை நிர்ணயித்த 140 ஓட்டங்களைத் துரத்திய பாகிஸ்தான் அணி, 123/7 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோற்றது.

இப்போட்டியில் சுழற்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக ஆடுகளத்தை இலங்கை அமைத்தது என, பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வாசிம் அக்ரம் தெரிவித்தார். இதை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) தலைமை அதிகாரி டேவ் ரிச்சர்ட்சனும் ஏற்றுக்கொண்டார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

பொதுவாக ஒரு இன்னிங்ஸில் பயன்படுத்தப்படும் ஆடுகளத்தின் தன்மை, அடுத்த இன்னிங்ஸின்போது மாறாத வகையில் இருக்க வேண்டும். முதல் அரையிறுதியில் பயன்படுத்தப்பட்ட ஆடுகளம், ருவென்ரி-20 போட்டிக்கு ஏற்ப சாத்கமானதாக இல்லை. சுழற்பந்து வீச்சாளர்களுக்கு அதிகமாக ஒத்துழைத்தது.

இது இரு அணிக்கும் சாதகம் தான் என்றாலும், இலங்கை சுழற்பந்து வீச்சாளர்கள், சொந்த மண் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். அதிகமான வெப்பம் நிலவுவதால், ஆடுகளம் நன்கு காய்ந்து இருந்ததாக இதன் தயாரிப்பாளர் கூறினார். இதை ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கரப்பந்தாட்டப் போட்டி

(சாவகச்சேரி)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாவட்ட பிரதேச மட்ட கரப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் மின்னொளியில் ஆரம்பமாகவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையிலான போட்டித் தொடராகவும், யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டித் தொடராகவும் இடம்பெறவுள்ள இக்கரப்பந்தாட்டப் போட்டிகளில் முன்னணி அணிகள் பல பங்குகொள்கின்றன.

இன்றைய தினம் இடம்பெறவுள்ள தென்மராட்சிப் பிரதேச மட்ட போட்டியில் மட்டுவில் சந்திரன் அணியை எதிர்த்து கச்சாய் ஸ்ரீமுருகன் அணி மோதவுள்ளது. இதேவேளை, இப்போட்டித் தொடரில் வெற்றியீட்டும் அணிகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், பங்குபற்றுகின்ற அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (11)


# இறுதிப் போட்டிக்குத் த

(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் விளையாட முன்னணி வீராங்கனைகள் மரியா கூரபோவா (ரக்ஷ்யா), அசரென்கா (பெலாரஸ்) தகுதி பெற்றனர். அரையிறுதியில் சீனாவின் லிநா யுடன் மோதிய கூரபோவா 6-4, 6-0 என்ற நேர் செட்களில் எளிதாக வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரையிறுதியில் பிரான்சின் மரியோன் பர்டோலியுடன் மோதிய அசரென்கா 6-4, 6-2 என்ற நேர் செட்களில் வென்றார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் பிரான்ஸ் வீரர் சோங்கா 6-1, 4-1 என முன்னிலை வகித்தபோது, அவருடன் மோதிய பெலிசியானோ லோபஸ் (ஸ்பெயின்) காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகினார். இதையடுத்து சோங்கா இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.மற்றொரு அரையிறுதியில் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா) 6-1, 6-4 என்ற நேர் செட்களில் புளோரியன் மேயரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் ஜோகோவிச் - சோங்கா மோதுகின்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா ஞ நூரியா லகோஸ்டரா விவஸ் (ஸ்பெயின்) ஜோடி போராடித் தோற்றது. இறுதிப் போட்டியில் மகரோவா - வெஸ்னினா ஜோடியுடன் நேற்று மோதிய சானியா ஜோடி 5-7, 5-7 என்ற நேர் செட்களில் வீழ்ந்தது.



# நடுவர் பணி கடினமானது

(கொழும்பு)

கிரிக்கெட்டில் நடுவர் பணி என்பது கடினமானது. இதில் அந்தளவிற்கு நேர்மையாகவும், பொறுப்பாகவும் செயற்பட்டதாகவே நான் உணர்கின்றேன். திட்டமிட்ட ரீதியில் நான் எந்தவொரு தவறையும் இழைக்கவில்லை என சைமன் டபள் தெரிவித்தார். உலகின் தலைசிறந்த கிரிக்கெட் நடுவர்களில் ஒருவரான அவுஸ்ரேலியாவின் சைமன் டபள், நேற்று நிறைவடைந்த ருவென்ரி-20 உலக கோப்பை இறுதி ஆட்டத்துடன் நடுவர் பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நான் நடுவராக பணியாற்றிய காலத்தில் மறக்க முடியாத சில தருணங்கள் உண்டு. அதில் 2011ஆம் ஆண்டு ஒரு நாள் போட்டி உலகக் கிண்ணப் போட்டியில் மொகாலியில் நடந்த இந்தியா - பாகிஸ்தான் இடையிலான அரையிறுதிக்கு நடுவராகச்செயற்பட்டதைகுறிப்பிட்டுச்சொல்ல முடியும். இருநாட்டு பிரதமர்கள் ஆட்டத்தை நேரில்பார்த்தனர். பரபரப்பாகவும் உணர்ச்சிகரமாகவும் இந்த ஆட்டம்அமைந்தது.அந்த உலக கிண்ணப்போட்டித் தொடரின் இரு இறுதிப் போட்டிகள் நடந்ததாக உணர்ந்தேன். ஏனெனில் அரையிறுதியும் இறுதிப் போட்டி போன்றே இருந்தது என்றார்.



# ஹர்பஜன்சிங்கால் சாதிக்க முடியும்

(பெங்களூர்)

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங்கால் இன்னமும் சாதிக்க முடியும். அவரை ஒருபோதும் புறக்கணிக்க முடியாது என இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே தெரிவித்துள்ளார்.

ஹர்பஜன் சிங்கை எப்போதும் கருத்திற்கொள்ள வேண்டும். அவருக்கு இப்போது 32 வயது மாத்திரமே ஆகிறது. சுழற்பந்து வீச்சாளர் ஒருவர் முதிர்ச்சியடைவதற்கான சிறந்த வயது இதுவாகும்.

ஹர்பஜன் சிங் தொடர்ச்சியாகச் சிறப்பாகப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். அவரால் நிச்சயமாக தனது உயர் நிலையை அடைய முடியும். இந்தியாவின் கிரிக்கெட் எதிர்காலத்திற்கு ஹர்பஜன் சிங் நிச்சயமாகச் சிறந்த பணியை ஆற்றுவார்.

ஹர்பஜன் சிங் மிகச்சிறந்த திறமை கொண்டவர். மிகுந்த போட்டித்தன்மை வாய்ந்தவர்.

சிறந்த நிலையை மிக விரைவில் அடைவார். ருவென்ரி-20 தொடரில்இந்தியாவின் வெளியேற்றத்திற்கு டோனியை மட்டும் குறை கூறுவதில் அர்த்தமில்லை.

இதற்கு அனைவரும் பொறுப்பெழுக்க வேண்டும். விராட்ஹோலி சிறப்பான முறையில்ஆடி வருவது மகிழ்ச்சி எனவும் தெரிவித்தார்.



# ஸ்பொட் பிக்சிங் எமது கலாசாரம்

(லாகூர்)

ஸ்பொட் பிக்சிங் எங்களது கலாசாரம். ஏனென்றால் எங்களது வீரர்கள் குறைவான ஊதியம் பெறுகிறார்கள். குறிப்பாக சர்ச்சையில் சிக்கிய வீரர்கள் குறைவான போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளனர். இவர்களுக்குப் போதியளவு ஊதியம் வழங்கப்படும் பட்சத்தில் இதனைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என அக்தர் தெரிவித்துள்ளார்.

நானும் கடந்த 2008ஆம் ஆண்டு கார் வாங்கக் கூட பணம் இல்லாமல் சிரமப்பட்டு நண்பரிடம் கடன் வாங்கினேன். ஆனால், நான் எனது நிலைமையை சமாளித்துவிட்டேன். மற்றவர்கள் தவறான வழிகளில் சிக்கிக் கொள்கின்றனர்.

கிரிக்கெட் போட்டிகளில் ஸ்பொட் பிக்சிங் எனப்படும் சூதாட்டத்தில் ஈடுபட்டு அதிகளவில் சிக்கியவர்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் ஆவர்.

இவர்கள் இவ்வாறு செய்வதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைதான் காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தானின் டெஸ்ட் அணித்தலைவர் சல்மான் பட், மொஹமட் ஆமிர், மொஹமட் ஆசிப் ஆகியோர் ஸ்பொட் பிக்சிங் சர்ச்சையில் சிக்கி கைதாகி சிறையிலடைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்தரின் இக்கருத்திற்கு முன்னாள் வீரர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



## ராகுலன், ஆதித்தியன் சிறப்பான இணைப்பாட்டம்

# டொனால்ட் வெற்றிக் கிண்ணம் கே.சி.சி.சி. வசம்





படம் : எஸ்.பி.

(யாழ்ப்பாணம்)

ராகுலன், ஆதித்தியன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் டொனால்ட் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் கே.சி.சி.சி. அணி கைப்பற்றிக் கொண்டது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில்நடத்தப்பட்ட டொனால்ட் வெற்றிக் கிண்ண ஒரு நாள் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். சென்றலைட்ஸ் அணியும், கொக்குவில் கே.சி.சி. அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் சிறப்பான பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. இருப்பினும் ஜனோசன், வதுசனன், ஜேம்ஸ் ஜான்சன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால் சென்றலைட்ஸ் அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென்றலைட்ஸ் அணி 41. 4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனோசன் 36, வதுசனன் 32, யேம்ஸ் ஜான்சன் 31, மயூரன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிலோஜன், கிருபவன், ஜனுதாஸ், உத்தமகுமரன், சாம்பவன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 182 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி சாள்ஸ், கோகுலன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டுக்களை விரைவாகப் பறிகொடுத்ததுடன் தடுமாற்றமடைந்தது. ஒரு கட்டத்தில் 111 ஓட்டங்களைப் பெற்றிருந்தநிலையில் எட்டு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்துதோல்வியின் விளிம்பிற்கே சென்றிருந்தது. இருப்பினும் இந்த நிலையில் ஒன்பதாவது விக்கெட்டுக்காக இணைந்த ரம்மிய ராகுலன், ஆதித்தியன் இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதுடன் சென்றலைட்ஸ் பந்து வீச்சாளர்களை திறணடித்தனர். பிரிக்க முடியாத இந்த ஜோடி 71 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று கொக்குவில் கே.சி.சி.சி. கிண்ணம் வெல்லத் துணை புரிந்தனர். இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 41.4 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதில் உமாநாத் 48, உத்தமகுமரன் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது ரம்மிய ராகுலன் 48, அதித்தியன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சாள்ஸ் மூன்று கோகுலன், பிரசாத் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கே.சி.சி.சி அணியைச்சேர்ந்த உமாகாந்,சிறந்தகளத்தடுப்பாளராக அதே அணியைச் சேர்ந்த ஆதித்தியன், சிறந்த பந்து வீச்சாளராக சென்றலைட்ஸ் அணியைச் சேர்ந்த சாள்ஸ், சிறந்த சகலதுறை வீரராக கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த உத்தமகுமரன், இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக கொக்குவில் கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த ரம்மிய ராகுலன், தொடர் நாயகனாக சென்றலைட்ஸ் அணியைச் சேர்ந்த ஜேம்ஸ் ஜன்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் கலந்து கொண்டு சிறப்பித்தார். மற்றும் முன்னாள் பயிற்றுநர் சண்முகலிங்கம், விளையாட்டு ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(எஸ்.பி., 42)

# சதுரங்கப் போட்டி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

30 வருடங்களின் பின் மீண்டும் தேசிய சதுரங்கப் போட்டியில் யாழ். மாவட்ட அணி பங்குபற்றுவதற்கான தெரிவுப்போட்டிகள் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் யாழ்.கிளையினரால் நடாத்தப்படும் இந்த யாழ். மாவட்ட சதுரங்க அணிக்கான தெரிவுப் போட்டிகள் கடந்த 5ஆம் திகதி சதுரங்க சம்மேளனத்தின் செயலாளர் காங்கோயன் ஆதவன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்தப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் இருந்து பாடசாலைகள் உட்பட 24 கழகங்கள் பங்குபற்றின.

திறந்த போட்டியாக நடைபெறும் இந்தப் போட்டிகள் பெண்களுக்கான தனியான திறந்த போட்டிகள், ஆண், பெண் கலப்பு போட்டிகள் என இரண்டு பிரிவுகளாக நடைபெறுகிறன.

5 சுற்றுப் போட்டியாக நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டிகளில் இரண்டு பிரிவு அணிகளிலும் வெற்றி பெறும் முதல் மூன்று அணிகள் தெரிவு செய்யப்பட்டு கொழும்பில் நடைபெறும் தேசிய சதுரங்கப்போட்டிக்கு கூட்டிச்செல்லப்பட இருப்பதாகப் போட்டியை ஒருங்கமைத்த இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் யாழ். கிளை செயலாளர் காங்கோயன் தெரிவித்தார். (சி)



## விளையாட்டுச் செய்திகள்

### விரைவில் மாவட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் விளையாட்டு அமைச்சினால் தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களை இணைக்கும் பிரதேச மட்ட கால்பந்தாட்டப்போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் மாவட்டப் போட்டிகள் விரைவில் ஆரம்ப மாகவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)



# ஜமாய்த்தது ஆசிரியர் அணி

(கோண்டாவில்)

ஆசிரியர் தின மென்பந்து கிரிக்கெட் போட்டியில் பொற்பதி விக்னேஸ்வரா கல்வி நிலைய ஆசிரியர் அணி அபார வெற்றிபெற்றது.

கோண்டாவில் பொற்பதி விக்னேஸ்வரா கல்வி நிலையத்தின் வருடாந்த ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, நிலைய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையிலான மென்பந்து கிரிக்கெட் ஆட்டமொன்று நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இம்மென்பந்துப் போட்டி 12 ஓவர்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஆசிரியர் அணி நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வதன் 46 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 97 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மாணவர் அணி 12 ஓவர்கள் நிற்றவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் புவின்ராஜ் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக வதனும், சிறந்த பந்து வீச்சளராக புவின்ராஜும் தெரிவு செய்யப்பட்டனர். இதேவேளை, கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டியிலும் ஆசிரியர் அணி வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மண்டேலாவின் நாட்கள்

- எஸ்.ராமகிருஷ்ணன் -

நெல்சன் மண்டேலா ரொபின் தீவுச் சிறைச்சாலையில் இருந்த போது அவருக்கும் சிறையின் தணிக்கை அதிகாரியாக இருந்த ஜேம்ஸ் கிரிகோரி என்ற வெள்ளைக்காரருக்குமான நட்பை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது Goodbye Bafana என்ற படம்.

நெல்சன் மண்டேலா பற்றி இரண்டு படங்களை இதற்குமுன் பார்த்திருக்கிறேன். ஒன்று மண்டேலா என்ற டொகுமெண்ட்ரி, மற்றொன்று மோர்கன் ப்ரீமென் நடித்த Invictus. கிளிண்ட் ஈஸ்ட்வுட் இயக்கியது, ரக்பி விளையாட்டுப் போட்டி பற்றிய இப்படத்தில் முக்கிய கதாபாத்திரமாக நெல்சன் மண்டேலா இடம்பெற்றிருந்தார்.

Goodbye Bafana தென்னாபிரிக்காவின் நிறவெறி ஆட்சி பற்றி உரத்துப் பேசிய போதும், அடிநாதமாக இரண்டு மனிதர்களுக்கு இடையே ஆன நட்பையே விவரிக்கிறது.

நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகாலச் சிறை வாழ்க்கையில் மூன்று சிறைக் காவலர்களுடன் மிகுந்த நட்பாகப் பழகியிருக்கிறார். ஜேம்ஸ் கிரிகோரி, கிறிஸ்டோ பிராண்ட், ஜேக் ஸ்வார்ட் ஆகிய அந்த மூன்று சிறை அதிகாரிகளும் வேறு வேறு காலகட்டங்களில் மண்டேலாவிற்கு நெருக்கமாக இருந்திருக்கிறார்கள்,

இதில் ஜேம்ஸ் கிரிகோரி தனது சிறைச்சாலை




அனுபவங்களை Goodbye Bafana: Nelson Mandela, My Prisoner, My Friend என தனிநூலாக எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகத்தை அடிப்படையாக வைத்தே படம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கிரிகோரி விவரிக்கும் அனுபவங்கள் யாவும் நிஜமானவையில்லை, அவர் நிறைய கற்பனையாகச் சொல்கிறார் என்று மண்டேலாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆன்டனி சாம்சன் மறுக்கிறார், ஆனால் மண்டேலா தனது நூலில் ஜேம்ஸ் கிரிகோரி பற்றி மிகுந்த வாஞ்சையுடன் தான் நினைவு கொண்டிருக்கிறார்.

படம் தென்னாபிரிக்காவின் கேப்டவுனுக்கு அருகில் உள்ள ரொபின்தீவு சிறைச்சாலைக்கு கிரிகோரி பணிமாற்றமாகிச் செல்வதில் தொடங்குகிறது. சிறை அதிகாரிகளுக்கு சிறைச்சாலை என்பது ஒரு பணியிடம், கைதிகள் அவர்கள் அடக்கி ஒடுக்கி வேலை வாங்க வேண்டிய மிருகங்கள், யாரோடும் நெருக்கமாகப் பழகக்கூடாது, கைதிகளுக்கு எவ்விதமான சலுகைகளும் காட்டக்கூடாது என்பதில் சிறைத்துறை கடுமையாக இருக்கிறது.

ஜேம்ஸ் சிறையின் தணிக்கைப் பிரிவு அதிகாரியாக பொறுப்பு ஏற்றுக் கொள்கிறான். அவனது வேலை சிறைக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் படித்துத் தேவையற்ற தகவல்களை, அரசியல் செய்திகளை தணிக்கை செய்வது. இந்த சிறைச்சாலையில் ஒரு பகுதியில் மண்டேலா அடைக்கப் பட்டிருக்கிறார். அவருக்கு எவ்விதமான சலுகைகளும் காட்டப்படக்கூடாது என்பதில் தனிக்கவனம் மேற்கொள்ளப்படுகிறது.

மண்டேலாவின் Xhosa இன மொழியை ஜேம்ஸ் அறிந்துள்ள காரணத்தால் அவருடன் பழகி அவரது எண்ணங்கள், செயல்களை, உளவு வேலை செய்யும்படியாக உயரதிகாரிகளால் கட்டாயப்படுத்தப்படுகிறான். அவனுக்குள் இனவெறி இயல்பாகக் காணப்படுகிறது, ஆனால் மண்டேலாவின் நட்பு அவனை மெல்ல மாற்றத் தொடங்குகிறது. சிறைச்சாலையினுள் ஜேம்ஸ் சைக்கிளில் செல்வது, எதிர்த்துப் பேசும் கைதி கொட்டும் மழையில் அடிபட்டுக் கிடப்பது, சிறையில் தனது கணவனுக்கு உயர்பதவி கிடைக்க வேண்டும் என்பதற்கு ஜேம்ஸின் மனைவி மிகுந்த கனவோடு மேற்கொள்ளும் முயற்சிகள், கைதிகளை ஓரக்கண்ணால் கூட பார்க்கக் கூடாது என்று மறைத்து வளர்க்கப்படும் ஜேம்ஸின் மகன், ஜென்னியின் வருகை, மறைத்து எடுத்துவரப்படும் தகவல்கள், சிறை அதிகாரிகளின் கொடூர நடவடிக்கைகள் என்று படம் மெல்லத் தீவிரம் கொள்ளத் தொடங்குகிறது.

மண்டேலாவின் மகன் இறந்து போகையில் அவருடன் ஜேம்ஸ் மேற்கொள்ளும் உரையாடலும், ஜேம்ஸின் மகன் எதிர்பாராத விபத்தில் இறந்து போகையில் மண்டேலா கூறும் ஆறுதலும் அபாரமான ஒன்று. இரண்டு எதிரெதிர் துருவமாக உள்ள மனிதர்கள் நட்பின் வழியே எப்படி தங்கள் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்கிறார்கள் என்பதைப் படம் வலிமையாகச் சொல்கிறது.

அதீதமான வன்முறை, அதிவேகப் படத்தொகுப்பு, பாலியல் கிளர்ச்சிகள் என்று வழக்கமாக வெளியாகும் ஹொலிவுட் சினிமாவைப் பார்த்து பழகியவர்களுக்கு இப்படம் மிக மெதுவாக, நீரோட்டம் போல இயல்பாகச் செல்வது போரடிக்கவே செய்யும்.

ஆனால் முழுமையாகப் படத்தை பார்க்க வேண்டும், படம் முடிந்து சில நாட்களுக்கு அது உங்கள் மனதில் அப்படியே ஈரம் மாறாமல் தங்கியிருப்பதையும், அந்த உரையாடல்கள், இசை, காட்சிகள் மண்டைக்குள் ததும்பிக் கொண்டேயிருப்பதையும் உணர முடியும், அந்த வகையில் இது முக்கியமான படமே.

---

# குழந்தை மனம்

- ஆலிசன் கோப்னிக் -

பல வருடங்களாகவே, நாம் குழந்தைகளைக் குறைபாடுகள் உடைய வளர்ந்த மனிதர்களாகவே கருதி வந்திருக்கிறோம். அதாவது, அவர்களும் வளர்ந்த மனிதர்களைப் போன்றவர்களே. ஆனால் வளர்ந்த மனிதர்கள் செய்யக்கூடிய சில முக்கியமான செயல்களைச் செய்ய இயலாதவர்கள் என. தலை சிறந்த உளவியலாளரான ஜீன் பியாஜே (Jean Piaget) அவர்களே, குழந்தைகளை சுய-மைய நோக்குள்ளவர்களாகவும், நெறிகளற்றவர்களாகவும் கருதினார். மேலும், குறைந்த புரிதல் திறனே கொண்ட அவர்களால், அருவமான கருத்துக்களை உணரவோ, அறியவோ முடியாது - காரண-காரியத் தொடர்புகள் போன்றன புரியாது - எனவும் கருதினார்.

ஆனால், உண்மையில் நமது ஆய்வில் கண்டறிந்ததோ, சுய-மைய நோக்கும் குறுகிய புரிதலும் கொண்டவர்கள் குழந்தைகள் என்ற கருதுகோளுக்கு முற்றிலும் எதிர்மாறானது. சின்னஞ்சிறிய குழந்தைகளும் அவர்களைக் குறித்து இதுவரை நாம் கற்பனை செய்ததை எல்லாம் மீறிய அறிவும், புரிதலும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களால் தர்க்க ரீதியாக யோசிக்க முடியும் காரணங்களையும் அவற்றின் விளைவுகளையும் புரிந்து கொள்ளமுடியும், அடுத்தவரின் பார்வையில் இருந்து யோசிக்க முடியும்.

அதாவது, குழந்தைகள் பல நேரங்களில் தங்களுக்கென கற்பனைத் தோழர்களை, குறிப்பிடத்தக்க விவரமான துல்லியத்துடன்



சிருஷ்டித்துக் கொள்கிறார்கள். மேலும், கற்பனைத் தோழர்களைப் படைக்கும் குழந்தைகள் மற்ற குழந்தைகளைவிட எந்தவிதத்திலும் கிறுக்காகவோ, புத்திசாலியாகவோ, தனியராகவோ இருப்பதில்லை. எனவே, கற்பனைத் தோழர்கள் உள்ள குழந்தைகள் மற்ற குழந்தைகளைவிட மனிதர்களை நன்றாகப் புரிந்துகொள்கிறார்கள். இது "மனதின் கோட்பாடு" [Theory of mind] என அறியப்படுகிறது. குழந்தைகளிடம், எது குறைபாடாகக் காணப்பட்டதோ, அது உண்மையில் அவர்களுக்கு உதவக்கூடிய கருவியாகும். மேலும்



குழந்தைகள், தம்மைச் சுற்றிய உலகையும், இந்த விஷயத்தில், அவர்களைச் சுற்றி இருக்கும் மனிதர்களையும் புரிந்துகொள்ளுவதற்கு, எப்படி அற்புதமான வகையில் செயற்பட்டுச் சிந்திக்கின்றனர் என்பதற்கான உதாரணமாகும்.

மறுபடியும், நமது மரபான புரிதல் என்பது குழந்தைகள் மிகவும் சுய-மைய நோக்குடையவர்கள், அடுத்தவர்களுடைய பார்வையில் இருந்து யோசிக்க மிகவும் சிரமப்படுபவர்கள், அவர்களால் மனதிற்கும் உடலிற்குமான வேறுபாடுகளைப் புரிந்துகொள்ள முடியாது போன்றவை ஆகும். ஆனால், குழந்தைகள் தம் மனங்களைப் புரிந்து கொள்வதில் எத்தனை பண்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை நமது ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.


மூன்றிலிருந்து நான்கு வயதிற்குள் குழந்தைகள், மனிதர்கள் ஒரே விஷயத்தைப் பற்றி பல கோணங்களில் யோசிக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறார்கள். ஒரு உதாரணத்திற்கு, நான் உங்களிடம் ஒரு மூடிய இனிப்பு டப்பாவைக் காண்பிக்கிறேன். ஆனால், அதனுள் பென்சில்கள் இருக்கின்றன. அது மூடியிருப்பதால், அது உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆக, நான் அதனுள் பென்சில்கள் இருப்பதாக நினைக்கலாம், ஆனால் நீங்கள் அதனுள் இனிப்புகள் இருப்பதாக நினைக்கலாம். இதை, குழந்தைகள் மூன்றிலிருந்து நான்கு வயதிற்குள் அறிந்து கொள்கிறார்கள். இந்த சின்னஞ்சிறிய வயதுக் குழந்தைகள், எப்படிப் பல மனிதர்களும் உலகைப் பற்றிய பல பார்வைகளைக் கொண்டிருக்கக்கூடும் என்ற ஆழமான புரிதலைப் பெறுகிறார்கள்.

நான் என் சமீபத்திய புத்தகத்தில் வாதாடுவது என்னவென்றால், இங்கு ஒரு பேரம் நடக்கிறது. நீங்கள், பலவித விலங்குகளை, அவற்றின் பலவித இனங்களைக் கவனித்தீர்களானால், அவற்றில் குட்டிகள் முதிர்ச்சியற்று பலவீனமாக இருப்பதற்கும் வளர்ந்தவை மிகப் பண்பட்டவையாக இருப்பதற்கும் ஒரு ஒட்டுறவு இருப்பதைக் காணலாம். ஒரு உதாரணத்திற்கு, காகங்கள் கோழிக் குஞ்சுகளை விட கூர்மையான புத்தியுடையவைகள். ஆனால், அவை பறக்க கற்றுக்கொள்ளும் வரை, அதிக காலத்திற்குத் தன் தாயைச் சார்ந்திருக்கும். இதிலிருந்து நமக்கு கிடைக்கக் கூடிய கருத்து என்னவென்றால், நம் அறிவை செயற்படுத்துவதற்கு முன்பாக, நாம் பலவற்றையும் கற்றுக்கொள்ள நமக்கு ஒரு பாதுகாப்பான காலகட்டம் தேவைப்படுகிறது. குழந்தைகள் கற்பதில் அசாதாரணத் திறனுடையவர்கள். ஆனால், உலகை எதிர்கொள்ளும் சாமர்த்தியம் அவர்களிடம் குறைவு. அவர்களால் கற்றுக்கொள்ள முடியுமே தவிர, தாமாகவே சப்பாத்துகளை அணிந்து கொள்வதோ, காற்சட்டையைப் போட்டுக்கொள்வதோ தினமும் காலை பள்ளிக்கூடம் வெளிக்கிட்டுச் செல்வதோ அவர்களால் முடியாது. பேராசிரியர்களும், விஞ்ஞானிகளும் இவ்வாறு இருப்பதுண்டு.

நான் அடிக்கடி சொல்வதுண்டு, குழந்தைகள் சிறு விஞ்ஞானிகள் இல்லைதான், ஆனால் விஞ்ஞானிகள் என்னவோ பெரிய குழந்தைகளே!

புற நகர்களில் வாழும் தாய்மார்கள் எந்த நேரமும் அவர்கள் குழந்தைகளுடன் வீட்டிற்குள் இருப்பதுதான் இயல்பான ஒன்று என நாம் நினைப்பது தவறு. உண்மையில், ஒரு குழந்தையை வளர்க்க, தந்தை, தாத்தாக்கள், பாட்டிகள், மாமாக்கள், அத்தைகள் என நமக்கு ஒரு சமூகமே தேவைப்படுகிறது. நமக்கான நடைமுறைச் சவால், இங்கு நாம் இதை எப்படி சாத்தியப்படுத்த முடியும் என யோசிப்பதாகும். ஒரு உடனடியான முயற்சியாக, நாம் விளையாட்டுப் பாடசாலைகளையும், ஒரு கிராமத்து சமூகத்தைப் பிரதி


# நலம் செய்யும் நுண்ணுயிரிகள்




0.000000000001 எடையுள்ள நுண்ணுயிரிகள் மனிதனின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன - சுகாதாரமான சுற்றுப்புறச் சூழல் நடவடிக்கைகளால் அவற்றை ஒழித்துவிட்டால் நாம் ஆரோக்கியமாக இருக்கலாம் - என்று நம் பள்ளிகளில் சொல்லிக் கொடுத்தது எவ்வளவு பெரிய பிழை! நம் உடலிலுள்ள நுண்ணுயிரிகளைத் திரட்டினால் அவற்றின் எடை இரண்டு கிலோவுக்கும் அதிகமாக இருக்குமாம். மனித மூளையைவிட எடை கூடுதலாக உள்ள இந்த நுண்ணுயிரிகள் மனிதனின் கல்லீரலுக்கு இணையாக வேலை செய்கின்றன. மனித இரத்தத்தில் உள்ள மரபணுத் தொகுப்புகளில் முப்பத்தாறு சதவிகிதம் பக்டீரியாக்கள்தான் என்று சொல்கிறார்கள். மனிதன் வாழத் தேவையான கலோரிகளில் பத்து சதவிகிதத்தை இவை நமக்கு சேகரித்துத் தருகின்றன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த இவை, மனிதனின் சருமத்துக்கு வெளியேயும் உள்ளேயும் இருக்கின்றன - நம்மைவிட நூறு மடங்கு அதிக அளவில் இவற்றின் மரபணுத் தொகுப்புகள் உள்ளன. ஒரு பார்வையில், நாம் இந்த நுண்ணுயிரிக் குமிழில் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேலதிக சுவாரஷ்யமான விவரங்கள் இந்த இணையப்பக்கத்தில் உள்ளன.

http://www.spiegel.de/international/zeitgeist/western-lifestyle-leading-to-dangerous-bacterial-imbalances-a-856825.html

# விற்றமின் பி12 பற்பசை



ஜேர்மன் தாவர உணவுக் குழு ஒன்று ஒரு புது பற்பசையைத் தயாரிக்கவிருக்கிறது. இந்தப் பற்பசையில் விற்றமின் பி-12 சேர்க்கப்படவிருக்கிறது. தாவர உணவு மட்டுமே உண்பவர்களும், முதியோரும் பொதுவாக விற்றமின் பி-12 குறைபாட்டால் பாதிக்கப்படுபவர்கள் என்பது நமக்குத் தெரியும். இது உலகெங்கும் உள்ள ஒரு பிரச்சினை. பி-12 விற்றமின் அவ்வளவு எளிதில் மாத்திரைகள், மருந்துகள் வழியே உடலில் சேர்வதும் இல்லை. வயிற்றில் சேரும் மாத்திரைகளிலிருந்து இந்த விற்றமின் ஊட்டச் சத்து சுலபமாக உடலில் ஏற்கப்படுவதில்லை. ஆனால் நாவுக்கடியில் வைக்கப்பட்டு உமிழ்நீரில் கரைந்தால் உடலில் சேர்வது மேலாக இருக்கிறது (sub-lingual) என்று சொல்லப்படுகிறது. அதனால் இந்த ஜேர்மன் தாவர உணவுக் குழு ஒரு பற்பசை தயாரிப்பு நிறுவனத்துடன் சேர்ந்து தயாரித்த அந்தப் பற்பசை நல்ல விளைவைக் கொடுத்ததாக சோதனைகளில் தெரிய வந்திருக்கிறது.

# சுருங்கப்போகும் மக்கள்தொகை




மக்கள் தொகை வளர்ச்சி குறித்து உலகம் அச்சப்பட்ட நாட்கள் போய்விட்டன என்ற ஒரு தகவலை டிஸ்கவர் இதழில் உள்ள ஒரு கட்டுரை சொல்கிறது. அமெரிக்காவின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் முதியவர்களாக இருக்கக்கூடும் என்பதுதான் இந்தக் கட்டுரையின் செய்தி - ஆனால் இதை விவாதிக்கும்போது, உலகெங்கும் உள்ள மக்கள் பரப்பில் முதியோர்களின் பங்கு அதிகரித்து வருகிறது என்ற குறிப்புகள் கிடைக்கின்றன: சமுதாய மாற்றமும் பொருளாதார வளர்ச்சியுமே இதற்கான காரணங்களாக இருகின்றன. உதாரணத்துக்கு, தாய்வானில் 1950களை விட இன்று பிறப்பு விகிதம் எழுநூறு மடங்கு குறைந்திருக்கிறது. ஜப்பான், பிரேசில் என்று வளரும் நாடுகள் அனைத்திலும் இதுதான் இயல்பாக இருக்கிறது. சராசரியாக குடும்பத்துக்கு 2.1 குழந்தைகள் இருக்கும். தேசங்களின் மக்கள் தொகை நிலையாக இருக்கும்: தாய் தந்தையரின் இடத்தில் இரு குழந்தைகள் என்ற விகிதத்தில். ஆனால் உலகிலுள்ள தேசங்களில் ஏறத்தாழ நூற்றுக்கு அறுபதில் பிறப்பு விகிதம் மூன்றுக்குக் கீழும், நூற்றுக்கு முப்பதில் இரண்டுக்குக் கீழுமாய் குறைந்து விட்டன. அதிக மக்கள் தொகையுள்ள சீனாவிலும் கூட இறப்பு விகிதம் 1.5ஆகவே உள்ளது. இந்தியாவில் 2.6ஆக குறைத்து விட்டது - பிறப்பு விகிதம் குறைந்த காரணத்தால் உலக நாடுகளில் ஜப்பானின் மக்கள் தொகை அடுத்த ஐம்பது ஆண்டுகளில் மூன்றுக்கு ஒரு பங்கு குறைந்து விடுமாம்! கல்வியும் வளர்ச்சியும் எதிர்பாராத விளைவுகளுக்குக் காரணமாகி விடுகின்றன. இது குறித்த விவரங்கள் இந்த இணையப்பக்கத்தில் இருக்கின்றன:

http://discovermagazine.com/2012/oct/20-the-gray-tsunami/article_view?b_start:int=1&-C=

எடுக்கும் பிற அமைப்புகளையும் உருவாக்கலாம். அதாவது, மூன்று வயதுக் குழந்தைகளை முன்பள்ளிக்கு அனுப்புவதற்குப் பதிலாக, ஒரு இலட்சிய கிராமத்தின் சூழலைக் கொடுக்கும் வகையில் அமைந்த ஒரு விளையாட்டுப் பள்ளிக்கு அனுப்பலாம். அங்கு குழந்தைகள் துழாவித் துளைந்து, தாமாகப் பல வி'யங்களைக் கண்டறியலாம், விளையாடலாம், தம் மீது அக்கறை உள்ள, அவர்களைக் கண்காணிக்கும் பெரியவர்களுடன். இருக்கலாம். இது குழந்தைகளின் உண்மையான பெற்றோர் அவர்களுடன் இருப்பதற்கும், அவர்களைப் பராமரிக்கும் நேரத்தில் தம் வேலையையும் பார்த்துக்கொள்வதற்கும் ஏதுவான ஒரு சமூக அமைப்பை நமக்கு சுட்டுகிறது. இத்தகைய அமைப்பைத் தான் நாம் நம் பரிணாமப் படிநிலையின் முந்தைய கட்டத்தில் கொண்டிருந்திருப்போம்.


# டுபாயில் தாஜ்மஹால்

டுபாய் நகரில் தாஜ்மஹால் போன்ற கட்டிடத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த கட்டிடத்திற்கு "தாஜ் அரேபிய கட்டிடத் தொகுதி" என்று பெயரிடப்பட்டுள்ளது. எனினும் இந்த கட்டடத் தொகுதி தாஜ்மஹாலை விடவும் பல மடங்கு பெரிதாக அமைக்கப்படவுள்ளது. இதில் 30 அறைகள் கொண்ட ஹோட்டல், கடைகள், வணிக தொகுதிகள் ஆகியன அமைக்கப்படவுள்ளதாக இந்தக் கட்டிடத் தொகுதி செயற்பாட்டாளர் அருண் மெஹ்ரா குறிப்பிடுகிறார். எதிர்வரும் 2014ஆம் ஆண்டு இந்த கட்டிடத் தொகுதியை முழுமை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இருக்கும் தாஜ்மஹால் 350 ஆண்டுகளுக்கு முன் மொகாலய மன்னர் ஷாஜஹானால் தனது மனைவி மும்தாஜுக்காக கட்டப்பட்டதாகும். 20 ஆண்டுகள் செலவு செய்து கட்டப்பட்ட தாஜ்மஹால் உலக பாரம்பரிய சொத்துகளில் ஒன்றாகும்.



# தாண்டவம்

**- வேணுஜி -**



ஏற்கனவே "தெய்வத்திரு மகள்"ல அழகியலா வெற்றிப் படத்தைத் தந்த டைரக்டர் விஜய்யும், சீயான் விக்ரமும் கைகோர்த்த படம் என்பதால் இந்தப் படத்துக்கு ஏகப்பட்ட எதிர்பார்ப்பு.

ஹீரோவுக்கான எந்த எதிர்பார்ப்பும் பில்டப்புகளும் இல்லாமல் விக்ரம், அமைதியாக லண்டனில் அறிமுகமாகி ஒருத்தனைப் போட்டுத்தள்ளும் வரை அவர் பார்வையில்லாதவர் என்று நமக்குத் தெரிவதில்லை.

அது திரைக்கதையின் சுவாரஸ்யம் என்றால் அது நமக்குத் தெரிந்ததும் பார்வையில்லாதவராக விக்ரமை ஏற்கனவே பார்த்திருக்கிற "காசி"யை நினைவுபடுத்திவிடாமல் இன்னொரு பரிமாணத்தில் காட்டியிருக்கிறது நடிப்பில் அவர் எல்லா நடிகர்களுக்கும் "சீயான்"தான் என்று நிரூபிக்கிறார்.

சேர்ச்சில் பியானோ கலைஞராக வரும் அவர் கீபோர்ட்டில் ஊர்ந்துவரும் எறும்புக்கும் ஊறு செய்யாமல் அதை லாவகமாக எடுத்து கீழே விடுகிற காட்சி சின்ன அதிர்வையும் உணர்ந்துகொள்ளும் பார்வையற்றவரான அவரது நுண்ணறிவையும், பரோபகார உள்ளத்தையும் சொல்லிவிடுகிறது.

"உங்க அழகு என் கண்ணுக்குத் தெரியலை. ஆனா உங்க நடத்தையில் நீங்க அழகில்லாதவங்களா தெரியறீங்க" என்று எமி ஜாக்ஸன் குழுவினரின் விளையாட்டை ரசிக்காமல் அவர் சொல்கிற வசனம் நறுக்.

கடமையே "கண் டாக்டராக" வருகின்ற அனுஷ்கா, கல்யாணம் வேண்டாம் என்று நினைக்கிற விக்ரம் கண்களில் தேவதையாகி, அவர் மனைவியாகிறார். லண்டன் அழகியா வரும் எமி ஜாக்சன், சமூக நல ஆர்வலராக சைவ உணவுகளுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு மதிய உணவுக்கு தனக்கு "சிக்கன் பர்கர" சொல்வது லந்து.

அமைதியாகப் போகும் முன்பாதியில் லண்டனில் டாக்சி டிரைவராக வரும் சந்தானம்தான் சுவாரஸ்யத்தை "ட்ரைவ்" பண்ணிச் செல்கிறார். "எம்.ஜி.ஆர் யார்..?" என்று ஒரு வெள்ளைக்காரர் கேட்க, "ஆர்னோல்ட் பத்தியெல்லாம் நாங்க தெரிஞ்சு வச்சிருக்கோம். நீங்க எம்.ஜி.ஆர் பத்தியெல்லாம் தெரிஞ்சுக்க மாட்டீங்களா..?" என்று அவர் கலாய்க்கிறது அட்டகாசம்.

லண்டன் பொலிஸில் சந்தேகக் கேஸில் அவர் சிக்கியதும், "பொலிஸ் ஸ்டேஷனுக்கு ஒரு கட்டு வெள்ளைப் பேப்பர் வாங்கித் தர்றேன். இன்ஸ்பெக்டரை தனியா கவனிச்சுடறேன். என்னை விட்டுடச் சொல்லுங்க" என்று அவர் பேரம் பேசுவது "சூப்பர் லந்து..!"

இலங்கைத் தமிழராக வரும் துப்பறிவாளராக நாசர். "யாரடி" யாரடி..?", "அனிச்சம் பூவழகி" பாடல்களில் ரசிக்கவைத்திருக்கும், ஜி.வி. பிரகாஷின் பின்னணி இசையும், நீரவ் ஷாவின் அற்புதமான ஒளிப்பதிவும் தமிழில் ஆங்கிலப்பட சாத்தியத்துக்கு அருகில் கூட்டிப் போகுது.

சொக்கநாதபுரம் கிராமத்து காட்சிகளில் எம்.எஸ். பாஸ்கரும், "தப்பாச்சே"மாமா தம்பி ராமையாவும் தனித்துத் தெரிகிறார்கள்.

மொத்தத்தில், குடும்பத்தோடு மகிழ்வூட்டும் படமாக இருக்கிற இந்த "தாண்டவம்" இங்லீஷ் படம் பார்க்கிற ரசிகர்களுக்குப் பிடிக்கிறதாகவும், தமிழ்ப்பட ரசிகர்களுக்கு அதை அறிமுகப்படுத்துகிற இன்னொரு முயற்சியாகவும் இருக்கும்.




# ஒரு சிவப்பு பலூனின் கதை

எஸ்.கருணா

சிறுவர்களின் திருவிழா உற்சாகமாக பலூன் விற்பவர்கள்தான் இருக்கிறார்கள். திருவிழா வந்துவிட்டால் வீட்டில் அம்மா வைத்திருக்கும் சில்லறைகளெல்லாம் மாயமாகிவிடுகின்றன. குழந்தைகளின் கைகளில் சிறகாக பலூன்கள் முளைக்கத் தொடங்கிவிடுகிறது. வண்ணமயமான பலூன்களுடன் குழந்தைகள் துள்ளாட்டம் போடத் தொடங்கி விடுவார்கள்.

இந்த சின்னவயது சிலிர்ப்புகளை எல்லாருமே அனுபவித்திருப்போம். ஆனால், பலூன் பின்னால் நாம் சுற்றித் திரிந்ததைப் போல.... எப்போதாவது ஒரு பலூன் உங்கள் பின்னால் சுற்றி அலைந்திருக்கிறதா..? நீங்கள் போகுமிடமெல்லாம் உங்கள் பின்னாடியே வால் பிடித்துக்கொண்டு கூடவே வந்திருக்கிறதா..? உங்களோடு கதை பேசியிருக்கிறதா..? உங்களைத்தேடி உங்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்திருக்கிறதா..?

அதெப்படி முடியும்..! கற்பனைக்கு ஒரு அளவே இல்லையா.. என்று நீங்கள் கேட்பது புரிகிறது. ஆல்பர்ட் லமொரீஸ் இயக்கிய. THE RED BALOON என்ற பிரெஞ்ச் மொழி திரைப்படத்தைப் பார்த்தால் இந்தக் கேள்வியே உங்களுக்கு எழாது. அது 34 நிமிடங்கள் ஓடக்கூடிய ஒரு குறும்படம்தான். ஆனால் உலக சினிமா வரிசையில் இடம் பிடித்த படம் அது.

மெல்லப் பனியிறங்கிக் கொண்டிருக்கும் காலைப் பொழுதில் ஒரு சிறுவன் புத்தகப் பையுடன் பள்ளிக்கு கிளம்பி வருகிறான். வழியில் ஒரு சாலையோரக் கம்பத்தில் சிவப்பு நிற பலூன் ஒன்று சிக்கி காற்றில் ஆடிக்கொண்டிருப்பதை பார்க்கிறான். கம்பத்தில் ஏறி அந்த பலூனை எடுக்கிறான். காலையிலேயே கையில் பலூன் ஒன்று கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தபடியே பேருந்து நிறுத்தத்திற்கு வருகிறான். அவன் வழக்கமாக பள்ளிக்கு செல்லும் பேருந்து வருகிறது. பலூனுடன் பேருந்தில் ஏறப் போகும்போது பேருந்தின் நடத்துனர் பலூனுடன் பயணிக்கமுடியாது என பேருந்தில் ஏற்றிக்கொள்ள மறுக்கிறார்.

ஏமாற்றமடையும் சிறுவன், பலூனை கையில் பிடித்தபடியே பள்ளிக்கு ஓடிவருகிறான். பள்ளிக்குள் வந்தவுடன் பலூனை என்ன செய்வது... வகுப்பறைக்குள் அனுமதிக்க மாட்டார்களே என யோசித்து, பாடசாலை காவலாளியிடம் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கொடுத்துவிட்டு வகுப்புக்கு செல்கிறான். மாலையில் பள்ளிக்கூடம் முடிந்தவுடன் பலூனுடன் வெளியே வருகிறான். அப்போது மழை பெய்கிறது. அவனிடம் குடை எதுவும் இல்லை. பலூனை பாதுகாப்பாக எடுத்துச் செல்வது எப்படி..!

வழியில் குடைபிடித்தபடி செல்வோரிடம் கேட்டு பலூன் நனைந்துவிடாதவாறு பார்த்துக்கொள்கிறான். ஆனாலும் அவன் நனைந்துவிடுகிறான். பல குடைகள் மாறி மாறி சிறுவனும் பலூனும் வீடு வந்து சேர்கிறார்கள். ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் இருக்கிறது அவனது வீடு. வீட்டுக்குள் பலூனுடன் நுழைகிறான். சற்று நேரத்தில் வீட்டின் ஜன்னல் திறக்கிறது. அவனது தாய் அந்த சிவப்பு பலூனை வெளியே வீசி எறிந்துவிட்டு ஜன்னலை மூடிவிடுகிறாள். ஆனால் அந்த பலூன் எங்கும் செல்லாமல் ஜன்னல் அருகிலேயே பறந்து கொண்டிருக்கிறது. கொஞ்ச நேரம் கழித்து அச்சிறுவன் ஜன்னலை திறந்து பார்க்கும் போதும் அந்த பலூன் அங்கேயே அலைந்து கொண்டிருப்பதை காண்கிறான். கை நீட்டி அதை பிடிக்க முயற்சிக்கிறான். ஆனால் அது எட்டவில்லை. அவன் சோர்வுறும் ஒரு கணத்தில் அந்த பலூனே இறங்கி வந்து அவன் கைகளில் அமர்ந்து கொள்கிறது.

அடுத்த நாள் அவன் பள்ளிக்கு கிளம்பும்போது பலூனும் அவனுடன் கிளம்புகிறது. அதனிடம் ரகசியமாய் எதையோ சொல்லி பறக்கவிடுகிறான். அவன் பல மாடிகளை கடந்து கீழிறங்கி வரும்போது பலூன் அவனிடம் வந்து சேருகிறது. பலூனுடன் சிரித்து.. பேசி.. விளையாடியபடியே நடந்துசெல்கிறான். போகும்வழியெல்லாம் அவனுக்கு விளையாட்டுக்காட்டி மகிழ்வித்தபடியே உடன் செல்கிறது அந்த சிவப்பு பலூன். இருவரும் பேருந்து நிறுத்தத்திற்கு வருகிறார்கள். அவன் செல்ல வேண்டிய பேருந்தும் வந்து சேர்கிறது. பலூனை பறக்கவிட்டுவிட்டு அவன் பேருந்தில் ஏறிக்கொள்கிறான். பேருந்து வேகமாகச் செல்கிறது. பலூனும் அந்தப் பேருந்தை பின்தொடர்ந்து செல்கிறது. எல்லாரும் அதை அதிசயமாய் பார்க்கிறார்கள்.

பள்ளியருகே வந்தவுடன் பலூனை வெளியிலேயே காத்திருக்குமாறுச் சொல்லிவிட்டு சிறுவன் வகுப்பறைக்குள் செல்கிறான். நண்பன் இல்லாமல் எவ்வளவு நேரம் காத்திருப்பது... கொஞ்ச நேரம் கழித்து அந்த பலூன் பாடசாலைக்குள்ளேயே நுழைகிறது. அதைப் பார்க்கும் மற்ற சிறுவர்களுக்கு குஷியோ குஷி. அதைப் பிடித்து விளையாட முயற்சிக்கின்றனர். ஆனால் அது அவர்களின் கைகளில் சிக்காமல் சிறுவன் இருக்கும் வகுப்பறைக்குள் நுழைந்துவிடுகிறது. அதைப் பிடிக்க மற்ற சிறுவர்களும் ஆசிரியர்களும் முயற்சிக்கிறார்கள். அதனால் வகுப்பறைக்குள் ஓரே கூச்சல். தலைமையாசிரியர் வந்து அந்த சிறுவனை வகுப்பிலிருந்து வெளியேற்றி ஒரு அறையில் அடைத்துவிடுகிறார். இதை பார்த்துக்கொண்டிருக்கும் பலூன் சிறுவனை மீட்க போராடுகிறது. அந்த ஆசிரியர் செல்லும் இடமெல்லாம் பின் தொடர்ந்து செல்கிறது. அதனுடைய தொல்லை தாங்காமல் அவர் சிறுவனை தனியறையிலிருந்து திறந்துவிடுகிறார்.

பலூனுக்கும் அவனுக்குமிடையே ஒரு நெருக்கமான உறவு உருவாகிவிடுகிறது. இது மற்ற மாணவர்களிடையே பொறாமையை ஏற்படுத்துகிறது. அவனிடமிருந்து பலூனைக் கைப்பற்ற முயற்சி செய்து ஒரு முறை துரத்துகிறார்கள். சுற்றி வளைத்துவிடுகிறார்கள். ஆனால் அவர்களிடமிருந்து பலூனும் சிறுவனும் எப்படியோ தப்பிவிடுகிறார்கள். ஒரு நாள் அச்சிறுவன் தின்பண்டம் வாங்க ஒரு கடைக்குச் செல்கிறான். அப்போது பலூனை வெளியே காத்திருக்க சொல்லிவிட்டுச் செல்கிறான். சிறுவனின் வருகைக்காகக் காத்திருக்கும் அந்த பலூனை, சில சிறுவர்கள் மறைந்திருந்து பிடித்துவிடுகிறார்கள்.

திருடிய சிறுவர்கள் அதனை ஒரு ஒதுக்குப்புறமான இடத்திற்கு கொண்டு சென்று கட்டி வைத்து கல்லால் அடித்து உடைக்க முயற்சிக்கிறார்கள். வெளியேவரும் சிறுவன், அங்கிருந்த தனது பலூன் காணாமல் போய்விட்டதை அறிந்து அதனை தேடுகிறான். திருடிச் சென்றவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கிறான். அவர்கள் பலூனை உடைக்க முயற்சிப்பதைக் கண்டு துடிக்கிறான்.

– எஸ்.கருணா



அவர்களிடமிருந்து பலூனை மீட்டுக்கொண்டு தப்பி ஓடுகிறான். அந்த சிறுவர்களும் அவனைத் துரத்துகிறார்கள். ஒரு இடத்தில் அவனையும் பலூனையும் சுற்றி வளைத்துவிடுகிறார்கள்.

அவர்களிடமிருந்து பலூனைக் காப்பாற்ற கடுமையாகப் போராடுகிறான். அப்போது ஒருவன் வீசிய கவண்கல் பட்டு பலூனில் இருந்து காற்று வெளியேறத் தொடங்குகின்றது. கொஞ்சங்கொஞ்சமாய் காற்று வெளியேறி பலூன் துவண்டு கீழே விழுகிறது. ஒரு சிறுவன் பலூனை காலில் போட்டு மிதித்து உடைக்கிறான். காற்றெல்லாம் வெளியேறியதால் பலூன் வெறும் ரப்பர் துண்டாய் கீழே விழுகின்றது. சிறுவன் சிவப்பு பலூனைப் பார்த்து கண் கலங்குகிறான்.

இதுவரை நடந்தெல்லாம் நாம் நமது வாழ்வில் அடிக்கடி சந்தித்த பலூன் சண்டைகள்தான். ஆனால் இதற்குமேல் நடப்பதுதான் மாயாஜாலம். அது நமக்கெல்லாம் கிடைக்காத பேரனுபவம்.

அடுத்த காட்சியிலிருந்துதான் அந்த மாயாஜாலம் நிகழத்தொடங்குகிறது. அந்த ஊரில் சில சிறுவர்கள் கையில் வைத்திருக்கும் பலூன்கள் எல்லாம் அவர்களின் கைகளை விட்டுத் தானாய் பறக்கத் தொடங்குகின்றன. சிறுவர்களெல்லாம் அதை அதிசயமாய் பார்க்கிறார்கள். தெருவில் பலூன் விற்றுக்கொண்டிருக்கும் ஒரு பலூன்காரரின் கைகளிலிருக்கும் பலூன்கள் எல்லாம் அவரது கையைவிட்டுப் பறக்கத் தொடங்குகின்றன. வீடுகளிலிருந்து.. கடைகளிலிருந்து.. விருந்துக் கூடங்களிலிருந்து... கொத்துக் கொத்தாய் அந்த ஊரில் இருக்கும் எல்லா பலூன்களும் ஒரே நேரத்தில் வானத்தில் பறக்கின்றன. விதவிதமான வண்ணங்களில்.. விதவிதமான அளவுகளில்.. அந்த ஊரின் வானம் முழுவதும் பலூன்.. பலூன்.. பலூன்கள்தான்.

எல்லா பலூன்களும் நடத்தும் இந்த பலூன் அணிவகுப்பை ஊரே பேரதிசயமாய் வேடிக்கை பார்க்கிறது. என்ன நடக்கிறதென்றே அவர்களுக்குப் புரியவில்லை. நகரின் பல இடங்களைக் கடந்து செல்லும் அந்த பலூன்களின் அணிவகுப்பு சிவப்பு பலூனை இழந்து அழுது கொண்டிருக்கும் சிறுவனின் முன்னால் போய் இறங்குகின்றது.. சிறுவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அத்தனை பலூன்களையும் ஆச்சரியத்தோடு பார்க்கிறான். ஒரு பலூனை இழந்தவனுக்கு ஓராயிரம் பலூன்கள் கிடைத்த மகிழ்ச்சி. அவன் முகத்தில் ஆனந்தம் பொங்குகிறது. அந்த பலூன்களின் கயிறுகளைப் ஒன்றாக்கி கையில் பிடிக்கிறான். அத்தனை பலூன்களும் அவனைத் அப்படியே அலேக்காகத் தூக்கிக் கொண்டு வானத்தில் பறக்கின்றன. உயரே உயரே பலூன்களோடு சிறுவன் பறந்து செல்ல உருகிப்பெருகும் இசையுடன் படம் நிறைவடைகிறது.

1956 ஆம் ஆண்டில் வெளியான இப்படம், அந்த வருடத்திற்கான "கான்ஸ்" விருதையும்.. சிறந்த மூல திரைக்கதைக்கான விருதினையும், ஒஸ்கார் விருதினையும், சிறந்த கல்விப் படத்திற்கான விருதினையும் பெற்றது. இப்படத்தின் இயக்குனர் ஆல்பர்ட் லமொரீஸ் மிகச்சிறந்த ஆவணப்பட, குறும்பட இயக்குனர் என அறியப்பட்டவர். இப்படத்தில் வரும் அந்த சிறுவனாக நடித்திருப்பது இவரது மகன்தான்.

இந்தப்படத்தில் மிகக் குறைந்த வசனங்கள்தான் இருக்கும். ஆனால் படத்தின் சினிமா மொழி உங்களிடத்தில் நூறுநூறு விஷயங்களைப் பேசும். ஒருகாட்சியில் சிறுவன் சிவப்பு பலூனுடன் நடந்து போய்க் கொண்டிருப்பான். அப்போது எதிரில் ஒருசிறுமி நீலபலூனை கையில் பிடித்தபடி வந்து கொண்டிருப்பாள். இரண்டு

இதுவரை நடந்தெல்லாம் நாம் நமது வாழ்வில் அடிக்கடி சந்தித்த பலூன் சண்டைகள்தான். ஆனால் இதற்குமேல் நடப்பது தான் மாயாஜாலம். அது நமக்கெல் லாம் கிடைக்காத பேரனுபவம்.

பலூன்களும் சந்தித்துக் கொள்ளும். உடனே சிவப்பு பலூன் நீல பலூனை தொடர்ந்து போய் விளையாடத் தொடங்கிவிடும். சிறுவன் போய் அதை மீட்டு வரும்போது, நீல பலூன் சிவப்பை பின்தொடர்ந்து வந்துவிடும். உடனே சிறுமி ஓடிவந்து தனது நீல பலூனை பிடித்துச் 'செல்வாள்.

இந்தப்படத்தில் வரும் சிவப்பு பலூன் ஒரு குறியீடுதான். எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கும் ஆசை... கனவுகள்.. இலட்சியங்கள் போன்றவற்றின் குறியீடு தான் அந்த பலூன். அது நம்மை பின் தொடர்ந்தால்தான் வாழ்க்கையில் சுவாரசியம்.. சந்தோஷம்.. . போராட்டம்.. எல்லாமே இருக்கும். அவைகள் தற்காலிகமாக தோல்வி அடைந்தாலும்... அதனால் நாம் சோர்வுற்றாலும்.... அது போல ஒரு நூறு ஆசைகளும்.. கனவுகளும்.. இலட்சியங்களும்... மீண்டும் மீண்டும் வந்து கொண்டேதான் இருக்கும்... நம்மை உயரத்திற்கு கொண்டு சென்றுகொண்டுதான் இருக்கும்.. அந்தச் சிறுவனை வந்தடைந்த வண்ணவண்ண பலூன்களைப் போல. □

# போக்குவரத்து நேரக் கணிப்பாளரை நியமிக்க அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

விபத்துக்களைத் தடுக்கும் வகையில் முத்திரைச் சந்தி, கோப்பாய், ஆவரங்கால், ஆகிய நிலையங்களில் 750, 752/1 ஆகிய சங்கத்தினைச் சார்ந்த சிற்றூர்திகள் சம்பவத்தாள் பதிந்து சேவையில் ஈடுபட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, நேரக்கணிப்பாளர் மூவரை நியமிக்க அரச அதிபரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பேருந்து கம்பனிகளின் இணையம் தெரிவித்துள்ளது.

இவ்இணையம் இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரே பாதையில் இருசங்கங்களைச் சார்ந்த சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடும்போது ஏற்படும் போட்டி மனப்பான்மை விபத்துக்கள் மற்றும் பிரச்சினைகள் ஆகியவற்றைத் தடுக்குமுகமாகவே இணைய கட்டுப்பாட்டிலுள்ள நேரக்கணிப்பாளர்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களாக பருத்தித்துறை சங்கத்தினைச் சார்ந்த சிற்றூர்திகள் இணையக் கட்டுப்பாட்டினை மீறி பொது நேரக்கணிப்பாளரிடம் சம்பவத்தாள் பதியாமல் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

பத்து வருடங்களாகப் பின்பற்றிய இந் நடைமுறையினை மீறிய பருத்தித்துறை சங்கத்தின் தன்னிச்சையான செயற்பாட்டினாலே விபத்துக்கள் இடம்பெற ஏதுவாகின்றது.

இவ்வாறு இடம்பெறும் விபத்துக்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதுடன் பொது நேரக்கணிப்பாளரிடம் சம்பவத்தாள் பதிந்து சேவையில் ஈடுபடுதல் அவசியமென்பதனை அரச அதிபர், யாழ்.மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தலைவரிடம் தொடர்பு கொண்டதன் பிரகாரம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது நேரக்கணிப்பாளரிடம் சம்பவத்தாள் பதியாமல் சேவையில் ஈடுபடுவதால் பாரிய விபத்துக்கள் ஏற்பட ஏ்துவாகின்றது எனச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலையின் அபிவிருத்தி; மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஞான பண்டிதர் வித்தியாலயத்தின் ஆசிரிய தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் கந்தவனம் செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்களால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளருமான ஆ.இரவீந்திரதாஸன், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பழைய மாணவனான ஆசிரியர் சுபநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிபர், பாடசாலையின் நுழைவாயில் கதவை அழகுறத் திருத்தி பாடசாலையின் பெயரைப் பொறித்து சீர்செய்யும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நிதி உதவிகோரிய மனுவொன்றை அமைப்பாளரிடம் கையளித்தார்.

மனுவைப் பெற்ற அமைப்பாளர், தான் அமைச்சருடன் கலந்துரையாடி இதற்கான நிதியைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

# பராமரிப்பற்ற முதியோர்களுக்கான விசேட செயற்றிட்டம் முன்னெடுப்பு

(திருநெல்வேலி)

மிக வறிய பராமரிப்பதற்கு யாருமற்ற 60 வயதுக்கு மேற்பட்ட, வருமானமற்ற மூத்த பிரஜைகள் எனின் விண்ணணப்பத்தை கிராம அலுவலர் ஊடாக சமூக சேவை அதிகாரியின் சிபாரிசுடன் பிரதேச செயலகம் மூலம் அத்தியட்சகருக்கு அனுப்பலாம் என காந்தி முதியோர் இல்லத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த பிரஜைகள் சமூகத்தில் வைத்தே பிள்ளைகளால் பராமரிக்கப்படல் வேண்டும் என்னும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு முதியோர் நலன்பேணல் முன்னகர்த்தப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் 60 வயதின் மேல் 10,1636 முதியோர்கள் உள்ளனர். இவர்களில் 49,186 பேர் பெண்களாகவும், 52,450 பேர் ஆண்களாகவும் உள்ளனர். இலங்கையில் 70 வயதுக்கு மேல் 2 இலட்சத்து 19,193 மூத்த பிரஜைகள் உள்ளனர். ஆண்களின் ஆயுள் வயது 76 ஆகவும், பெண்களின் ஆயுள் வயது 73 ஆகவும் உள்ளது. முதியோர்களில் 76 வீதமானவர்கள் கல்வியறிவு பெற்றவர்களாகவும், சுகாதார வசதிகள் 98 வீதமாகவும், மூத்த பிரஜைகளின் நிலைமை இலங்கையில் காணப்படுகின்றது. இலங்கையில் 6705 பேர் 278 முதியோர் இல்லங்களில் வாழ்கின்றார்கள்.

பிள்ளைகள் பெற்றோரைப் பராமரிக்காதுவிடின் தாபரிப்பு பணம் பெற 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்டமூலம் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கலாம். இந்த உதவிகளை இல்லம் மூலம் இலவசமாகப் பெற்றுக் கொள்ள சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் முன்வந்துள்ளார்.

சனத்தொகையில் முதியோர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு தீர்வாக கிராமங்களில் முதியோர் பகல் நிலையங்கள் செயற்படுகின்றன. சமூகத்தில் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினாலும், சமூகசேவைத் திணைக்களத்தினாலும் கண்வில்லைகள், மாற்று வலுவுள்ளோருக்கான உபகரணங்கள், முதியோர் அடையாள அட்டைகள், பொது சன மாதாந்த உதவிப்பணம், சமூக பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டம் போன்றவை முதியோருக்கு கிடைக்கின்ற சேவைகளாக உள்ளன.

வட மாகாணத்திலுள்ள மூத்த பிரஜைகளுக்கான சேவை நிலையங்களாக புத்தூர் மெதடிஸ் மிஷன் முதியோர் இல்லம், சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லம், கரவெட்டி ஸ்ரீ பரமானந்தர் முதியோர் இல்லம், கொழும்புத்துறை செண். யோசப் முதியோர் இல்லம், இணுவில் மகிழ்ச்சி, திருநெல்வேலி அம்மா இல்லம், மருதங்குளம் சிவன் முதியோர் இல்லம், கிளிநொச்சி எஸ்.கே. முதியோர் இல்லம், மன்னார் சாந்தம் முதியோர் இல்லம் மற்றும் திருக்கேதீச்சரம் முதியோர் இல்லம், கோப்பாய் மற்றும் வவுனியா அன்னை திரேசா முதியோர் இல்லம் என பன்னிரண்டு இல்லங்கள் உள்ளன. (137)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

IT, Beautician, Diesel Mechanic, Marketing, Tailoring, English Langnage, Sinhala Language ஆகிய துறைகளில் அனுபவமிக்க போதனாசிரியர்கள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது தொழிற்கல்வி நிலையத்தில் கற்பிற்பதற்கு தேவைப்படுகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விபரக் கோவையை தொடர்பு இலக்கத்துடன் 21.10.2012 இற்கு முன்பாக Tha Administrative Officer, 23 - 1/1, Gregory's Road, Dehiwala. என்ற முகவரிக்கு அல்லது ilead.colompo@gmail.com என்னும் மின்னஞ்சலுக்கும் அனுப்பலாம்.

---

நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப்பிரதிநிதி உடன் தேவை. தொடர்புகளுக்கு: 0777 44 4407.

---

பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு உண்டு. வயது 18 தொடக்கம் 30 வரை. தகைமை க.பொ.த சாதாரணதரம். பயிற்சியின் போது 15,000 ரூபாவும் அதன் பின் 45,000 ரூபாவும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 9994 807, 0114986066.

---

கிளிநொச்சியில் அமைந்துள்ள காரியாலயம் ஒன்றில் பணி செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு: 077 416 9026.

---

புளியங்குளத்தில் சீமெந்துக் கற்கள் (வீட்டுக்கல்) உற்பத்தி செய்வதற்கு ஆண் பணியாளர்கள் இருவர் தேவை. ஒரு சீமெந்துப் பைக்கற்றுக்கு 400 ரூபா வீதம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 416 9026.

---

பண்ணை ஒன்றில் பணிபுரிவதற்கு சிட்டை எழுதுநர் (பில் போடுபவர் - பெண்) மற்றும் கூடு பராமரிப்பாளர் (பெண்) தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும். தொடர்புகளுக்கு: வீனஸ் பாம், கலாசாலை வீதி முத்துத்தம்பி மகா வித்தியாலய வடக்கு ஒழுங்கை, திருநெல்வேலி. தொ.பேசி: 077 5201 921.

---

பிரபல K.V.Printers புத்தக விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. A/L சித்தியடைந்தவர்கள் விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளமாக 8,000 ரூபா வழங்கப்படும். அதன் பின் அதிகரிக்கப்படும். தொடர்புகளுக்கு: இல.368, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி.இல: 077 063 3116.

---

குளிர்பான நிலையத்துக்கு முன்அனுபவமுள்ள காசாளர் தேவை. தொடர்புகளுக்கு: 077 4384113.

---

யாழ்ப்பாணத்திலுள்ள வீடொன்றில் தங்கி நின்று வீட்டுவேலை செய்யக்கூடிய பெண் தேவை. தொடர்புகளுக்கு: 078 900 1739.

---

கிளிநொச்சியில் இயங்கும் அஸ்வினி மல்ரி பிளாசா நிறுவனத்திற்கு கணக்கீடு பதிவாளர், கணினி இயக்குநர் ஆகிய பணி நிலைக்கு முன்னனுபவமுடைய ஆண் பணியாளர்கள் தேவை. தகைமையுடையோர் இன்றும், நாளையும் காலை 10 மணி முதல் 5 மணி வரை சமுகம் தரவும். கிளிநொச்சியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

---

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்கும் கம்பனிக்கு கூலியாட்களும், மேசனும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். தொடர்புகளுக்கு: வி.வி.கருணாரட்ண அன் கொம்பனி, 12A கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி இல 071 171 2003, 077 934 4786.

---

வவுனியா பிரபல நகைக்கடையொன்றிற்கு அனுபவமுள்ள விற்பனையாளர், உதவியாளர் தேவை. வயது 20 - 40 இற்கு இடைப்பட்டவர் விரும்பத்தக்கது. வவுனியாவில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு 024 2222062, 077 3170339, 0786148798.

# க.பொ.த(உ/த) மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

2011ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த(சா/த) பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றி அப் பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த(உ/த) வகுப்பில் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்று 2014 ஆம் ஆண்டில் க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவ மாணவிகளுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் புலமைப் பரிசில்களை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் நாட்டில் உள்ள சகல கல்வி வலய அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ் நிதியத்தினைப் பெற அரசாங்க பாடசாலையிலோ அல்லது தனியார் பாடசாலை ஒன்றிலோ கல்வி கற்கும் மாணவனாகவோ அல்லது மாணவியாகவோ இருப்பவர் தகுதியுள்ளவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பதாரரின் குடும்பத்தின் மாதந்த வருமானம் 5,000 ரூபாவுக்கு மேற்பட்டாமல் இருத்தல் வேண்டும் எனவும், விண்ணப்பதாரர் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் உதவு தொகை பெறாத ஒருவராக இருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில்களுக்காக விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களை தாம் க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபர்களிடம் மாத்திரம் ஒப்படைக்கு மாறு கோரப்பட்டுள்ளது. இதற்கு விண்ணப்பதாரிகள் குடும்ப மாதாந்த வருமானம் பற்றிய பிரதேச செயலரின் அறிக்கை அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர், அவ்விண்ணப்பப் படிவங்களை 2012.11.19ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணிப்பாளரிடமும், வலயக் கல்வி பணிமனை குறித்த நேர்முக பரீட்சையை நடாத்தி தனது சிபார்சுடன் 2012.12.12ஆம் திகதிக்கு முன்னர் மாகாண கல்விப் பணிப்பாளரிடமும் ஒப்படைக்கும் படியும் ஜனாதிபதி நிதியத்தின் மூலம் சகல வலய கல்விப் பணிமனைகளும் கோரப்பட்டுள்ளன. (42)

# மேலதிக அரசாங்க அதிபரின் புதல்வர் மன்னார் வாகன விபத்தில் பலி

(மன்னார்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் புதல்வரான வெக்ஸ்மன் லெம்பேட் (வயது-20) என்பவர் உயிரிழந்ததோடு மேலும் இருவர் படுகாயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த மூன்று இளைஞர்களும் சனிக்கிழமை மதியம் முச்சக்கர வண்டி ஒன்றில் மன்னாரில் இருந்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று விட்டு மீண்டும் மன்னாரை நோக்கி வந்து கொண்டிருந்த போது, பேசாலை நடுக்குடா வீதியில் பிற்பகல் 2.30 மணியளவில் குறித்த முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டை இழந்த நிலையில் பனைமரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது. இதன் போது படுகாயமடைந்த 3 இளைஞர்களும் சில மணித் தியாலங்களில் பின்னர் மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அங்கு அளிக்கப்பட்டது.

படுகாயமடைந்த மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரின் புதல்வரான வெக்ஸ்மன் லெம்பட் என்பவருக்கு அதி தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் அன்று மாலை 6.30 மணியளவில் உயிரிழந்தார். ஏனைய இரண்டு இளைஞர்களும் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் கடந்த வாரம் 40 பாகை செல்சியஸ் வெப்பம்

(கொழும்பு)

இலங்கையில் என்றுமில்லாத அதிகளவு வெப்பநிலை பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்தவாரம் முப்பதாண்டுகளாக இல்லாத வகையில், அதிகளவு வெப்பநிலை பதிவாகியுள்ளது.

கடந்தவாரம் வவுனியாவில் 40.1 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

பொலநறுவை மாவட்டத்தில் 40 பாகை செல்சியஸ் வெப்பம் நிலவியது.

அனுராதபுரம், பொலன்நறுவை, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அடுத்த சில நாட்களுக்கு இது போன்று கடும் வெப்பநிலை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரியான ஜீவன் கருணாரத்ன கூறியுள்ளார்.

மலையகத்திலும் வெப்பநிலை சிறிதளவு அதிகரித்துள்ளது. கண்டியில் 32.6 பாகை செல்சியஸ் வெப்பநிலை காணபட்டது.

அதேவேளை, கொழும்பில் சராசரி வெப்பநிலையான, 31 பாகை செல்சியசே நிலவுகிறது.

## சேவையாற்றும் மணிக்கூடு

(குருநகர்)

யாழ்-மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகள் நேற்றுமுன்தினம் முதல் ஓடத்தொடங்கி இருந்தன. இவ்வருட முற்பகுதியில் இருந்து பழுதடைந்து காணப்பட்ட கோபுரமணிக்கூடுகள் இடையிடையே பிழையான நேரங்களைக் காட்டிச் செயற்பட்டது.

பிற்பாடு இருண்டே காணப்பட்டது. நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 8.14 மணிக்கு சரியான நேரத்தைக் காட்டிக் கொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. (68)

# “எம்மை வாழவைத்தவர்கள்” நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபரான பொ.கனகசபாபதியால் எழுதப்பட்ட எம்மை வாழவைத்தவர்கள் எனும் நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் வரவேற்புரையை மகாஜனக்கல்லூரி பிரதிஅதிபர் சு.சயந்தன் தலைமையுரையை மகாஜனக்கல்லூரி அதிபர் கு.வேல்சிவானந்தன் ஆற்றவுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் நா. சண்முகலிங்கன் நூலைவெளியீட்டு வைக்க முதற்பிரதியை வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறையின் செயலாளர் சி.சத்தியசீலன் பெறவுள்ளார். தொடர்ந்து வாழ்த்துரைகளை வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் வைத்தீஸ்வராக்கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.சிவசரவணபவான் ஆகியோரும் ஆய்வுரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பேராசிரியர் மா.சின்னத்தம்பி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உடல் தொழிலியற்றுறை இணைப்பேராசிரியர் க.சிவபாலன் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் நயப்புரையை மகாஜனக்கல்லூரியின் முன்னாள் அதிபர் சிவமலர் அனந்தசயனனும் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து நுலாசிரியர் கௌரவிக்கப்பட்டு ஏற்புரையை நூலாசிரியர் பொ.கனகசபாபதி ஆற்றவுள்ளார்.

நன்றியுரையை பழையமாணவர் சங்க இணைச் செயலாளர் சி.தேவகுமாரன் ஆற்றவுள்ளார். (93)

# செயலமர்வு

(திருநெல்வேலி)

சென் ஜோன்ஸ் அம்புலன்சின் செயலமர்வு கடந்த 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் என சுமார் 250 பேர் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயவீர, சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்சின் யாழ் மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன், உதவி ஆணையாளர் ஈழநேசன் மற்றும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து வந்த நத்த குமார, காமினி, விமலசேன ஆகியோர் இச் செயலமர்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை நடைபெற்ற இச் செயலமர்வில் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (137)

# புலமைப்பரிசில் பெறுபேறு

(ஆனைக்கோட்டை)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மானிப்பாய் விவேகானந்த பாடசாலையின் 8 மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து சண்டிலிப்பாய் கோட்டத்தில் சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

இதில் ச.த.வைஸ்ணவி 187 புள்ளிகளையும், ச.கந்திதரன் 172 புள்ளிகளையும், சே.துசாந் 171 புள்ளிகளையும், இ.ரஜீத் 168 புள்ளிகளையும், சி.திவானி 165 புள்ளிகளையும், ந.நிதர்ஷனா 161 புள்ளிகளையும், தி.கல்சிகா 152 புள்ளிகளையும், பா.விதுர்ஷனா 148 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இப்பாடசாலை மாணவர்களின் சாதனையை பாடசாலை சமூகத்தினரும் பிரதேச மக்களும் பாராட்டியுள்ளனர். (104)

# ரமேஸ் முன்பள்ளியில் சிறுவர் தினநிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வள்ளிபுனம் ரமேஸ் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஐ.மாதவராசா வள்ளிபுனம் பிரதேச இராணுவ அதிகாரி லெப்டினன் கருணாரட்ன ஆகியோர் கலந்து கொண்டு முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் 50 முன்பள்ளி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (04)



கைதடி பிரதேச சமூக சேவையாளர் அமரர் சி.இரத்தினத்தின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு அண்மையில் நவபுரம் கிராமத்தில் இடம்பெற்றபோது ஆசிரியர் சி.மதியழகன் உரையாற்றுவதையும், ஓய்வுநிலை அதிபர் எஸ்.அப்புத்துரை மற்றும் நாகப்பா ஆகியோர் நினைவு இறுவெட்டை வெளியீட்டு வைப்பதையும் காணலாம்.

10. வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான விடையை எழுதுக.
மழைகாலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாக இருந்தால் வரட்சிக் காலத்தில் வனங்கள் ..................
.................................... மிக்கனவாக இருக்கும்

**பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

11) நாங்கள் .................................. சென்றோம்.
(சரணலயம் ∴ சரணாளயம் ∴ சரணாலயம் ∴ சரணாழயம்)

12) மக்கள் அக்கிராமத்தை .............................. கிராமம் என்று அழைத்தனர்
(பூச்சோலைக் ∴ பூஞ்சோலைக் ∴ பூஞ்சேலைக் ∴ பூஞ்சோளைக்)

**பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

13. கைகொடுத்தல் - ..........................
14. கிணற்றுத் தவளைபோல - ..........................

**பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில் ) எழுதுக.**

15. புத்தகம் - ..........................
16. பேனை - ..........................
19. ஐந்து - ..........................
18. பச்சை - ..........................

**பின்வரும் தொடர்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

19. Silence Please - ..........................
21. Thank you - ..........................
22. Come in - ..........................
23. What is this?- ..........................

**பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தினை சிங்களத்தில் எழுதுக.**

23. அம்மா - ..........................
24. கதிரை - ..........................
25. மாம்பழம் - ..........................
26. அதிபர் - ..........................

27. பின்வரும் அரசர்கள் கட்டுவித்த குளங்கள் முறையாக அமையும் விடையின் கீழ்க் கோடிடுக.

| | |
|---|---|
| A - தாது சேனன் | C - தேவநம்பிய தீசன் |
| B. - மகாசேனன் | D - பண்டுகாபயன் |

| | | | |
|---|---|---|---|
| 1. A - அபயவாவி | B - மின்னேரியா | C - திஸ்ஸவாவி | D - கலாவாவி |
| 2. A - மின்னேரியா | B. - கலாவாவி | C - திஸ்ஸவாவி | D - அபயவாவி |
| 3. A - கலாவாவி | B. - மின்னேரியா | C - திஸ்ஸவாவி | D - அபயவாவி |
| 4. A - கலாவாவி | B. - திஸ்ஸவாவி | C. - அபயவாவி | D - மின்னேரியா |

28. இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியங்களுக்கு ஒப்பான, கலைத்துவ படைப்புக்கள் காணப்படும் இடம் எது?
1.சிகிரியா 2. கம்பளை
3. தலதாமாளிகை 4. எம்பக்க தேவாலயம்

29. வொலிபோல் விளையாட்டுக்கான ஒரு குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 6 2. 7 3. 10 4. 12

(தொடரும்....)

**சென்றவார 'பயிற்சி வினாவிற்குரிய பகுதி I விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | (02) | 2. | (03) |
| 03. | (01) | 4. | (02) |
| 05. | (04) | 5. | (04) |
| 06. | (03) | 7. | (01) |
| 08. | (01) | 9. | (03) |
| 10. | (02) | 11. | (02) |
| 12. | (02) | 13. | (02) |
| 14. | (01) | 15. | (02) |
| 16. | 1. (03) 2. (02) | | |
| 17. | (03) | | |
| 18. | (04) | 19. | (02) |
| 20. | (03) | 21. | 1. (03)2. (01) |
| 22. | (02) | 23. | (03) |
| 24. | (01) | 25. | (02) |

**எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியீடு 02 இற்கான விடைகள் வெளிவரும்.**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 02

S.T.திலக்

**கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வினாத்தாளின் தொடர்ச்சி....**


**கீழே தரப்பட்டுள்ள கூட்டுக்குள் ஒரு குடும்பத்தின் உறவுமுறை குறித்துக் காட்டப்பட்டுள்ளது. உறவுமுறைகளைக் கவனமாக அவதானித்து 26, 27 வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

| | |
|---|---|
| A யின் தாய் B ஆவார் | B யினது மகள் C ஆவார் |
| C யின் கணவர் D ஆவார் | E, F என்போர் D யின் பிள்ளைகளாவர் |

26) இக்குடும்பத்தின் மூத்த உறுப்பினரைத் தெரிவு செய்து கோடிடுக
1) C 2) B 3) A 4) D

27) E என்பவர் பெண் பிள்ளையாயின் A,E என்பவர்களுக்கான உறவு முறை யாது?
1) மாமா - மருமகள் 2) பெரியம்மா - மகள்
3) பெரியப்பா - மகள் 4) தாத்தா - பேத்தி

**கீழே முதலில் தரப்பட்டுள்ள முழு உருவினை ஆக்குவதற்கு ஆறு துண்டுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மேலதிகமானது. தேவையற்ற பகுதியின் ஆங்கில எழுத்தினைத் தெரிவு செய்து கோடிடுக.**

28)



**எதிரே உள்ள கோலத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

29)

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ⇨ | 9 | ☆ | 81 |
| 5 | ☆ | 25 | ⇨ | 30 |
| 3 | ☆ | 9 | ☆ | B |
| 8 | ☆ | A | ⇨ | 69 |

1) B இன் பெறுமதி யாது?
1) 15 2) 21 3) 81 4) 85


2) A இன் பெறுமதி யாது?
1) 13 2) 14 3) 24 4) 64

30) பானுவிடம் மூன்று வகையான நாணயக்குற்றிகள் 12 இருந்தன. அந்நாணயக் குற்றிகளின் முழுப் பெறுமதி ரூபா 30 ஆகும்.
மேற்கூறிய கருத்தினைத் திருப்திப்படுத்தும் கூற்று


1) ரூபா 5 நாணயம் 4, ரூபா 2 நாணயம் 4, ரூபா 1 நாணயம் 2
2) ரூபா 2 நாணயம் 6, ரூபா 5 நாணயம் 3, ரூபா 1 நாணயம் 3
3) ரூபா 1 நாணயம் 6, ரூபா 5 நாணயம் 3, ரூபா 2 நாணயம் 3

31) முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்று கொண்ட ஒருவர் தனது உருவத்தைப் பார்த்துக்கூறிய கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்று யாதாக இருக்கும்?
1) இக்கண்ணாடியில் தெரிபவரின் தந்தை எனது தந்தை ஆவார்.
2) இக்கண்ணாடியில் தெரிபவரின்தந்தை எனது சிறிய தந்தை ஆவார்
3) இக்கண்ணாடியில் தெரிபவரின் தந்தை எனது மகனின் மாமன் ஆவார்.

32) தரப்பட்டுள்ள அட்டைத்தாளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட பெட்டியினைத் தெரிவு செய்து கோடிடுக.



33) மாணவன் ஒருவன் காலையில் எழுந்து கால்முகம் கழுவி ஆயத்தமாகி பாடசாலை சென்று வகுப்பறையில் படிக்கும் விதத்தினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்குமுறைப்படி காட்டும் விடை எது?




1) 2,5,3,4,1 2) 2,4,1,3,5 3) 4,3,5,1,2

**கீழே சில வாக்கியங்களும், ஒவ்வொரு சொற்களுக்குமான குறியீடுகளும் அருகருகே தரப்பட்டுள்ளன. இருப்பினும், சொற்களுக்குரிய குறியீடுகள் ஒழுங்குமுறையில் வைக்கப்படவில்லை. ஒவ்வொரு சொற்களுக்குரிய குறியீடுகளை இனங்காண்பதன் மூலம் 34, 35 ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இன்று | பாடசாலை | விடுமுறை | நாள் | ▲ | ❄ | ✹ | ✿ |
| நான் | நாளை | பாடசாலை | செல்வேன் | ▲ | ❉ | ✶ | ❀ |
| நான் | இன்று | கோயிலுக்கு | செல்கிறேன் | ★ | ❀ | ● | ◍ |
| நாளை | வங்கி | விடுமுறை | நாள் | ✹ | ✛ | ✶ | ✿ |

34) இன்று பாடசாலை செல்கிறேன் என்பதற்குப் பொருத்தமான குறியீடுகள் எவை?

1) ❄ ▲ ● 2) ▲ ✿ ✛ 3) ● ▲ ◍


35) ❀ ✹ ✿ ◍ ❉ எனும் குறியீடுகள் தரும் கருத்து யாது?

1) நான் வங்கி விடுமுறை நாள் செல்வேன்
2) நான் விடுமுறை நாள் கோயிலுக்குச் செல்வேன்
3) நாளை விடுமுறை நாள் நான் கோயிலுக்குச் செல்வேன்.

36) 1 ஆம் 2 ஆம் பொதிகளில் உள்ள பொருட்களின் பெறுமதிகளை அவதானித்து 3 ஆம் பொதியில் உள்ள பொருளின் பெறுமதியைக் கணித்து விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.





1 ஆம் பொதி 2 ஆம் பொதி 3 ஆம் பொதி

37)  என்றவாறு மின் குமிழ்கள் பொருத்தப்பட்ட கொடி ஒன்று அருகே தரப்பட்டுள்ளது. இதில் 50 ஆவது மின்குமிழின் நிறம் யாது?

.................................................................



**தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பொருத்தமான விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

38) 


A,B,C,D,E,F ஆகிய ஆறு நகரங்களை இணைக்கும் பாதைகள் கீழே உருவப்படத்தின் மூலம் தரப்பட்டுள்ளன. அவற்றில் D எனும் நகரத்திலிருந்து E நகரத்தினூடாக F எனும் நகரம் வரைக்குமான தூரம் யாது?

.................................................................

**குறித்த வலயம் ஒன்றில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் அதி கூடுதலான வருகை தந்த முதல் ஐந்து மாணவர்களும் தெரிவு செய்யப்படுவர். மாணவரொருவரின் ஒரு புத்தகப் பையும் மாணவியாரின் ஒரு குடையும் வழங்கத் தீர்மானித்து தகவல் பெறப்பட்டது. இத்தகவலின்படி சேகரிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு,**

36 பாடசாலைகளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
ஆண் - பெண் - பெண் - ஆண் - ஆண்
45 பாடசாலைகளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
ஆண் - பெண் - பெண் - ஆண் - பெண்
39 பாடசாகைளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
பெண் - ஆண் - பெண் - ஆண் - பெண்

**இத்தகவல்களைப் பயன்படுத்தி 39, 40 ஆம் வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக**

39) 120 பாடசாலைகளுக்கும் வழங்குவதற்கு வாங்க வேண்டிய புத்தகப் பைகளின் எண்ணிக்கை யாது?

.................................................................

40) குடை ஒன்று ரூபா 200.00 எனின் குடைகளை வாங்குவதற்குச் செலவாகும் தொகை யாது?

.................................................................

## பகுதி II

**பின்வரும் விபரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக**

மழை காலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்ததுபோலக் காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லாம் நீர் நிறைந்திருக்கும். நதிகளிலோ, குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்கப் பதுங்கிச் செல்லும் நிலையை நாம் காணமுடியாது. நன்றாக விளைந்த கிழங்குகள், வேர்கள், இலைகள் என்பவற்றைச் சுவைத்து உண்டு பருத்து பன்றிகளோடு, மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக் கூட்டம் நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளே ஆடி அசைந்து செல்வதையும் காணலாம்.

01. வனங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல் ஒன்று தருக. ..........................
02. பருத்து என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ஒன்று தருக ..........................
03. களிறு என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக ..........................
04. அஃறிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக ..........................
05. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்று எழுதுக. ..........................
06. தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக ..........................
07. ஆடி அசைந்து என்பதாற் கருதப்படுவது யாது? ..........................
08. நதிகளிலோ குளங்களிலோ விலங்குகளுக்கு நீர் குடிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்படுவதில்லை?
..........................
09. ஆரவாரம் என்பதாற் கருதப்படுவது யாது? ..........................

# ஜெயலலிதா, மன்மோகன் சிங் உருவப் பொம்மைகள் எரிப்பு



காவிரியிலிருந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் கொடுப்பதை நிறுத்த வலியுறுத்தி கன்னட அமைப்பினர் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தினர்.

கன்னட ஜாக்குறுதி வேதிகா, கன்னட ரக்ஷன வேதிகை, கடிநாடா, யுவசேனா போன்ற கன்னட அமைப்பினர் தமிழக, கர்நாடகா எல்லையில் பிரதமர் மன்மோகன் சிங், முதல்வர் ஜெயலலிதாவை கண்டித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

· பேருந்து போக்குவரத்து நிறுத்தப்பட்டதில் மறியல் போராட்டத்தால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

கன்னட ஜாக்குறுதி வேதிகா மாநில தலைவர் மஞ்சுநாததேவா தலைமையில் அமைப்பினர் ஆடு, மாடுகளை ஊர்வலமாக அழைத்து வந்து எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். டயர்களை தீயிட்டு கொளுத்தி சாலையில் போட்டும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்பின் கன்னட கடிநாடா, யுவசேனா அமைப்பினர், கழுதைகள் கழுத்தில் பிரமதர் மன்மோகன் சிங் மற்றும் முதல்வர் ஜெயலலிதா உருவப் படத்தை தொங்க விட்டு, ஊர்வலமாக தமிழக, கர்நாடக எல்லைக்கு வந்தனர்.

பின்னர் மன்மோகன் சிங், ஜெயலலிதா உருவப் பொம்மைகளை எரித்தனர். ஊர்வலமாக எல்லையை நோக்கி வந்த கன்னட அமைப்பினரை அம்மாநில பொலிஸார் தடுக்கவில்லை என்பதும் அவர்களுக்குப் பாதுகாப்பாக வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எண்ணெய்க் கப்பல் வெடித்து குஜராத்தில் 5 பேர் பலி



குஜராத் மாநில கப்பல் உடைக்கும் தளத்தில் ஏற்பட்ட விபத்தில் 5 தொழிலாளர்கள் பலியான சம்பவம் அம் மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் மாநிலத்தில் பாவ்நகர் மாவட்டம் அலாங்கில் உள்ள கப்பல் உடைக்கும் தளத்தில் நின்று கொண்டிருந்த எண்ணெய்க் கப்பல் வெடித்துள்ளது.

இது குறித்து பாவ்நகர் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் தெரிவிக்கையில்; அலாங் கப்பல் உடைக்கும் தளத்தில், எண்ணெய்க் கப்பலை உடைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தபோது, அந்தக் கப்பல் திடீரென வெடித்து தீ பற்றி எரிந்தது.

இந்த விபத்தில் 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 2 பேர் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




தாங்கி வெடித்ததற்கான காரணம் தெரியவில்லை என்றும் இதுகுறித்து தடயவியல் நிபுணர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.




வனவிலங்குகள் பாதுகாப்பு வார விழாவையொட்டி, பீகார் தலைநகர் பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விலங்குகளின் முகமூடியை அணிந்து கலந்துகொண்ட கல்லூரி மாணவிகளைக் காணலாம்.

# இந்தியாவைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

## உயர்நீதிமன்ற நீதிபதிகள் விசனம்

(புதுடில்லி)

நதிநீர் பங்கீட்டு தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் டில்லியில் தங்குவதற்கு வீடு ஒதுக்கீடு பெறத் தகுதியில்லை என மத்திய அரசு பதில் அளித்தது. இதில் திருப்தியடையாத உயர்நீதிமன்ற நீதிபதிகள், "இந்த நாட்டைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என வருத்தம் தெரிவித்துள்ளனர்.

கர்நாடகா மற்றும் கோவா மாநிலங்களுக்கிடையே, மகாதாயி நதிநீர் பங்கீடு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, 2010 நவம்பரில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. இதன் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளுக்கு ஓய்வு பெற்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இவர்கள் டில்லியில் தங்குவதற்கு வீடுகள் ஒதுக்கப்படாதது தொடர்பாக உயர்நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை, நீதிபதிகள் லோதா மற்றும் தாவே ஆகியோர் அடங்கிய குழு முன், விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஹரின் ரவல் வாதிடுகையில், அரசு குடியிருப்புகளை பொது ஒதுக்கீட்டின் கீழ் பெறுவதற்கு, தீர்ப்பாய உறுப்பினர்களுக்குத் தகுதிகள் இல்லை என்றார். இந்த வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதிகள், தங்கள் உத்தரவில் கூறியதாவது;

விதிமுறைகளின் படி, தீர்ப்பாயத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அரசு குடியிருப்புகளில் தங்குவதற்கு இடம் உள்ளது. ஆனால், ஓய்வு பெற்ற நீதிபதிகள் டில்லி தெருக்களில் அலைந்து திரிய வேண்டும் என்று விரும்புகிறீர்களா?


ஆழ்ந்த தூக்கத்தில் உள்ள உங்களை, நீதிமன்றம் எழுப்ப வேண்டும். என்று கட்டாயப்படுத்துகிறீர்களா? தீர்ப்பாயங்கள் செயற்படுவதை, நீங்கள் விரும்பவில்லை என்றால், தீர்ப்பாய நீதிபதிகளை நியமிக்கும் சட்டத்தை உடையுங்கள். உங்களையும், இந்த நாட்டையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கடுமையாகக் குறிப்பிட்டனர்.

# இன்று கூடங்குளம் முற்றுகைப் போராட்டம்; 15 ஆயிரம் பேர் படகுகளில் பங்கேற்பு

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வேண்டும் என வலியுறுத்தி கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக அந்தப் பகுதி மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். உண்ணாவிரதம், ஊர்வலம் என பல்வேறு நிலைகளை எட்டிய இந்தப் போராட்டம் தற்போது முற்றுகை போராட்டமாக மாறி உள்ளது.

கடந்த மாதம் 10ஆம் திகதி கடற்கரை வழியாக சென்று அணுஉலையை முற்றுகையிட போராட்டக் குழுவினர் முயன்றனர். அப்போது பொலிஸார் தடியடி நடத்தி அவர்களைக் கலைத்தனர். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு கூடங்குளத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் இன்று மீண்டும் முற்றுகைப் போராட்டத்தை அறிவித்து உள்ளனர். இந்த போராட்டத்தில் குமரி மாவட்டத்தில் இருந்தும் ஏராளமானோர் பங்கேற்க உள்ளனர். இதுதொடர்பாக அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் சார்பில் நாகர்கோவில் அ.சி.சி அரங்கத்தில் ஆலோசனை கூட்டம் நடந்தது. அகில இந்திய மீனவர் முன்னணித் தலைவர் நாஞ்சில் மைக்கேல் தலைமை தாங்கினார். கூட்டத்தில் 44 மீனவ கிராம பிரதிநிதிகள், உள்நாட்டு மீனவ பிரதிநிதிகள் உட்பட பல்வேறு அமைப்பைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்து கொண்டனர்.



கூட்டம் முடிந்ததும் நாஞ்சில் மைக்கேல் செய்தியாளர்களிடம் கூறுகையில்;

கூடங்குளம் அணு உலையை மூட வலியுறுத்தி அணு உலையை கடல் வழியாக சென்று முற்றுகை போராட்டம் நடத்துகிறோம். இது மீனவரின் போராட்டமோ, கிறிஸ்தவர்களின் போராட்டமோ அல்ல. தென் பகுதியில் வாழும் மக்களின் போராட்டம். போராட்டத்திற்கு 32 கட்சிகள் மற்றும் அமைப்புகள் ஆதரவு அளித்துள்ளன என்றார்.

# பெண்கள் தயாரிக்கும் "யமஹா ரே ஸ்கூட்டர்"



பெண்களைப் கவரும் அம்சங்களுடன் சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட யமஹா ரே ஸ்கூட்டரை தயாரிப்புச் செய்யும் உற்பத்திப் பிரிவில் முழுக்க முழுக்க பெண்களை நியமித்திருக்கிறது யமஹா நிறுவனம்.

ஜப்பானை சேர்ந்த யமஹா நிறுவனம் "ரே" என்ற ஸ்கூட்டருடன் முதன்முறையாக இந்திய ஸ்கூட்டரும் சந்தைப்படுத்த நுழைந்துள்ளது. இந்த நிலையில், ரே ஸ்கூட்டர் உற்பத்தி செய்யப்படும் உத்தரபிரதேசத்திலுள்ள சூரஜ்பூர் ஆலையின் உற்பத்திப் பிரிவில் புதிதாக 200 பெண்களை நியமித்திருக்கிறது யமஹா நிறுவனம்.

இந்த ஸ்கூட்டரை முழுக்க முழுக்க பெண்களே உற்பத்தி செய்கின்றனர். இந்திய அளவில் மட்டுமல்ல உலக அளவில் யமஹா வரலாற்றில் முதன்முறையாக உற்பத்திப் பிரிவில் பெண்கள் பணியமர்த்தப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும்.

இந்தப் புதிய முயற்சி வாகன உற்பத்தித் துறையில் பெரும் மாற்றத்தை கொண்டு வரும் என யமஹா நம்பிக்கை தெரிவித்துள்ளது. மேலும், புதிதாகப் பணியில் சேர்க்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு ஓர் ஆண்டு முடிவில் அரசின் அங்கீகாரம் பெற்ற தொழிற்பயிற்சி சான்றிதழ் வழங்கப்படும் என்று யமஹா தெரிவித்துள்ளது.

# கோவிலைவிடக் கழிவறைகள் சுத்தம்; சர்ச்சையில் சிக்கினார் அமைச்சர்

கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு கழிவறையின் அவசியத்தை உணர்த்தும் வகையில் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், விழிப்புணர்வு யாத்திரை நடத்தி வருகிறார். இதுதொடர்பாக டில்லியில் நடந்த நிகழ்ச்சியில் அவர் பேசுகையில்;

கோவில்களைவிட கழிவறைகளைச் சுத்தமானதாக உருவாக்குவதற்காகவே இந்த யாத்திரை நடத்தப்படுகிறது. நமது நாட்டில் உள்ள எல்லா இடங்களையும்விட கோவில்கள் மிக அசிங்கமானவையாக உள்ளன. இதை கவலைக்குரியதாகக் கருதவேண்டும். கோவிலுக்கு போகும்போது நாம் மூக்கை மூடிக்கொள்ளும் நிலையில் கோவில்கள் உள்ளன என்றார்.

இந்தப் பேச்சுக்கு பாரதிய ஜனதா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அதன் செய்தித் தொடர்பாளர் பிரதாப்சிங் கூறுகையில்;

சிதைந்து போன ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் செல்வாக்கை காப்பாற்றுவதற்குப் பதிலாக ஜெய்ராம் ரமேஷ் இதுபோன்ற சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிடுவதை நிறுத்திக்கொள்ளல் வேண்டும்.

கழிவறைகளைக் கட்டுவதும், வழிபாட்டுத் தலங்களின் மீது நம்பிக்கை வைப்பதும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான செயல்களாகும். பன்முக கலாசாரம் கொண்ட இந்திய மக்கள், வழிபாட்டு தலங்கள் மீது வைத்துள்ள களங்கமற்ற நம்பிக்கையை, கழிவறையுடன் ஒப்பிடுவது. கண்டனத்துக்குரிய செயலாகும் என்றார்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## சர்ச்சையை ஏற்படுத்திய திருமணம்

# உணவுக்காக 65 கோடி செலவு

மலேசியாவில் மிக ஆடம்பரமான முறையில் நடைபெற்ற திருமணம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

மலேசியா நாட்டில் உள்ள மலேக்கா மாகாண முதல் மந்திரியாக இருப்பவர் அலிமுஸ்தான். இவரது மகன் ரித்வான் அலியின் (வயது - 26) திருமணத்தை மிகவும் ஆடம்பரமான முறையில் நடத்த அலிமுஸ்தான் திட்டமிட்டார்.

இதற்காக ஏராளமான நபர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. திருமணத்தில் மட்டும் 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். உணவுக்கு மட்டுமே ரூபா.65 கோடி வரை செலவிடப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆடம்பர திருமணம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

எதிர்க்கட்சியினர் இதனைக் கடுமையாக விமர்சித்துள்ளதுடன், அரச பணத்தை திருமணத்துக்கு செலவிட்டு இருப்பதாக குற்றஞ்சாட்டி உள்ளன. இவ்வளவு செலவு செய்து திருமணத்தை நடத்த அவருக்கு எங்கிருந்து பணம் வந்தது என்று மத்திய அரசின் இலஞ்ச ஒழிப்புத் துறை விசாரிக்க வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தி உள்ளனர்.

ஆனால் உணவுக்காக ஒரு கோடி ரூபாய் மட்டுமே செலவு செய்ததாக முதல்மந்திரி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்களுக்கு கொடுமைகள்;

# ஜெனிவா நகரில் ஆர்ப்பாட்ட பேரணி




பெண்களைக் கேலி கிண்டல் செய்தல் மற்றும் அவர்களின் விருப்பமின்றி வல்லுறவு கொள்ளல் போன்ற குற்றங்களை எதிர்த்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜெனிவா நகரில் பேரணி நடத்தினர்.

இதில் பெண்கள் குட்டைப் பாவாடை அணிந்தும், உயரமான காலணிகள் அணிந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளும் வல்லுறவுகளும் தூண்டப்படுவதில்லை, குற்றத்தில் ஈடுபடுபவர்கள் தவறு என்று தெரிந்தேதான் செய்கின்றனர் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசமிட்டனர்.

பெண்கள் அணியும் உடையைப் பொறுத்தே இவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் தூண்டப்படுவதாக, கனடா நாட்டின் டோர்நேட்டோ பகுதியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி 2011 ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார்.

ஆர்ப்பாட்டகாரர்கள் இவர் கூறிய கூற்றை எதிர்த்தும், வல்லுறவு தூண்டப்படுவதில்லை "Don't tell me how to dress, tell them not to rape" போன்ற வாசகங்களை கையில் ஏந்தியும் போராட்டம் நடத்தினர்.

பெண்கள் சுதந்திரமாக இருககவும், கேலி கிண்டல்கள் செய்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கை இப்போராட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

# எனது ஆட்சிக்காலத்திலேயே வேலை வாய்ப்பு அதிகரிப்பு

## – ஒபாமா பெருமிதம்



நான் ஆட்சிக்கு வந்தபின் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் ஒபாமா, தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். ஒகியோ மாகாணத்தில் தனது ஆதரவாளர்களிடையே அவர் பேசியதாவது,

நான் ஆட்சிக்கு வந்தபோது, மாதந்தோறும் 8,00,000 வேலைகளை இழந்து கொண்டிருந்தோம். கடந்த இரண்டரை ஆண்டுகளில் 5,20,00,000 கூடுதல் வேலைவாய்ப்புகளை நமது நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ளன.

கடந்த செப்ரெம்பரில் மட்டும் 7.8 சதவீதம் பேர் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து மாதந்தோறும் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளிலேயே இதுதான் மிகவும் குறைந்த சதவீதமாகும். எனது ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக ஏராளமான அமெரிக்கர்கள் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

பொருளாதாரத் தேக்கத்தைத் தடுக்க இந்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை மிட் ரோம்னி ஆட்சிக்கு வந்தால் தொடர்ந்து செயற்படுத்த மாட்டார் என்றார் ஒபாமா.

பணியாளர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறித்த புள்ளி விபரங்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன.

இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களாக வேலைவாய்ப்பற்றோர் எண்ணிக்கை 8.1 முதல் 8.3 சதவீதம் இருந்தது. இந்த எண்ணிக்கை இப்போது முதன் முறையாக செப்ரெம்பர் மாதத்தில் 7.8 சதவீதமாக குறைந்துள்ளது என்றார்.

உலகச் செய்திகள்

# கடலுக்கடியில் எண்ணெய்க் கிணறு மெச்சிக்கோவில் கண்டுபிடிப்பு

மெக்சிகோவில் கடலுக்கு அடியில் 12.5 கோடி பீப்பாய் அளவுக்கு எண்ணெய் வளங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் ஜனாதிபதி பெலிப் கேல்டரான் தெரிவித்துள்ளார்.

மெக்சிகோ வளைகுடாவில் கடலுக்கு அடியில் எண்ணெய் இருக்கிறதா? என்று அந்நாட்டின் அரசு எரிசக்தி நிறுவனமான பீமெக்ஸைச் சேர்ந்த நிபுணர்கள் பல ஆண்டுகளாக ஆராய்ந்து வந்தனர்.

அதன் தொடர்ச்சியாக, மெக்சிகோ கடற்கரைக்கு 180 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள இந்த மண்டலத்தில் கடந்த ஏப்ரலில் துறப்பணப் பணிகள் தொடங்கின.

அங்கு 25 கோடி முதல் 40 கோடிபீப்பாய் வரை எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ள டிரியன் - 1 என்ற எண்ணெய்க் கிணற்றை நிபுணர்கள் கண்டுபிடித்தனர்.

இதை மெக்சிகோ ஜனாதிபதி பெலிப் கேல்டரான் கடந்த ஆகஸ்ட் 29 ஆம் திகதி அறிவித்தார். இந்நிலையில், அதே பகுதியில் மற்றொரு எண்ணெய்க் கிணற்றை பீமெக்ஸ் நிறுவனம் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளதாக அவர் அறிவித்தார். இது, மெக்சிகோவின் வடகிழக்கு மாநிலமான டமாலி மாகாணக் கடற்கரைக்கு அப்பால் அமைந்துள்ளது. சுப்ரீமஸ்-1 என்ற இந்தக் கிணறு 2,900 மீற்றர் ஆழத்தில் உள்ளது. இதில் 12.5 கோடி பீப்பாய் அளவுக்கு எண்ணெய் வளங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

# சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தல்

## – பான் கீ மூன் தெரிவிப்பு –



சிரியா - துருக்கி இடையே ஏற்பட்டுள்ள மோதல் அந்தப் பிராந்தியத்தில் பூசல்களை ஏற்படுத்துவதோடு, சர்வதேச அமைதிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அனைத்துத் தரப்பினரும் வன்முறையைக் கைவிட்டு, அதிகபட்ச கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து, அரசியல் தீர்வைக் காண முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அதே வேளை, துருக்கிமீது சிரியா நடத்திய தாக்குதலை ஐ.நா. பாதுகாப்பு சபை கடுமையாகக் கண்டித்துள்ளது.

இதனிடையே, துருக்கிமீது சிரியா நடத்திய தாக்குதலை அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் கண்டித்துள்ளது. அதன் தகவல் தொடர்பாளர் ஜோர்ஜ் லிட்டில் கூறுகையில்,

சிரியாவின் தாக்குதல் தவறானது. அந்நாட்டின் செயல் எங்களைக் கோபப்படுத்தியுள்ளது. எனினும், இது மிகப்பெரிய மோதலாக உருவெடுக்காது என்று நம்புகிறோம். சிரியமக்களைத் தொடர்ந்து கொன்று குவித்து வரும் ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் ஆட்சி பதவியில் இருந்து விலகுவதற்கு இதுவே சரியான தருணம் என்று தெரிவித்தார்.



1973 ஆம் ஆண்டில் நடைபெற்ற அரபு - இஸ்ரேல் போரில் வெற்றி பெற்றதன் நினைவாக, தலைநகர் டமாஸ்கசில் இராணுவ அதிகாரிகளுக்கு வாழ்த்து தெரிவிக்கும் சிரியா ஜனாதிபதி பஷார் ஆசாத்.

# ஆடைக்காக அதிகம் செலவிடும் இங்கிலாந்து பெண்கள்

(லண்டன்)

பெண்கள் தங்கள் சம்பளத்தில் 18 சதவீதத்தை, ஆடைகள் வாங்குவதற்காக செலவழிக்கின்றனர் என கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. அலுவலகப் பொருட்கள் வழங்கி வரும் நிறுவனமான, ப்ரதர் யூ.கே. என்ற நிறுவனம் சமீபத்தில், ஒரு வேலைக்குச் செல்லும் பெண்கள் குறித்து கருத்துக் கணிப்பு நடத்தியது.

அதன் விவரம் வருமாறு,

உடன் பணிபுரிபவர்களை போல, தாங்களும் புதிதாக உடை அணிந்து செல்ல வேண்டும் என்ற மனப்பான்மை அலுவலகத்திற்குச் செல்லும் பெண்களிடம் அதிகரித்து வருகிறது. இதற்காக பெண்கள் 30 ஆயிரம் ரூபாய் அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கின்றனர். நான்கில் ஒருவர் உடன் பணிபுரியும் சக ஊழியரைப் போல் உடை அணிய வேண்டுமென்பதற்காக தங்களின் உடை அலங்காரப் பாணியை மாற்றிக் கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

அறுபது சதவீதமான பேர், தங்கள் தொழில் முன்னேற்றத்திற்காக புதிய ஆடைகள் வாங்குவதாக தெரிவித்துள்ளனர். சக ஊழியர்கள் அணியும் உடையை வைத்தே அவர்களை மதிப்பிடுவோம் என்றும், பெண்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். மூன்றில் ஒரு பங்கு பெண்கள், தாங்கள் ஒரே உடையை அடிக்கடி அலுவலகத்திற்கு உடுத்திச் சென்றால் சக ஊழியர்கள் என்ன நினைப்பரோ எனக் கவலைப்படுகின்றனர்.

இவ்வாறு அந்தக் கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு மக்களின் பங்களிப்பு அவசியமாகும்



(யாழ்ப்பாணம்)

மக்களின் முழுமையான பங்களிப்பும் அர்ப்பண உணர்வு மிக்க நிர்வாக செயற்பாட்டினூடாகவுமே கூட்டுறவுச்சங்கங்கள் வளர்ச்சி பெறமுடியும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று வட்டக்கச்சியில் அமைக்கப்பெற்ற கூட்டுறவுச்சங்கக் கிளையினை திறந்து வைத்தபின் மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், பொருளாதாரத்தால் வளர்ச்சி பெற்ற பல கூட்டுறவுச்சங்கங்கள் இன்று பொதுப்பணிகளிலும் மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளிலும் பங்கெடுக்கின்றன ஆனால் இப்பகுதியில் இயங்கும் சங்கங்களால் அவ்வாறான செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபட முடிவதில்லை அவற்றின் பொருளாதார நிலையும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடம் கொடுப்பதில்லை. எனினும் மீள் குடியேற்றத்தின் பின் கூட்டுறவுத் துறைகளை வளர்ப்பதற்காக அரசாங்கம் பெரும் தொகையான நிதியை செலவிட்டுள்ளது ஆனாலும் எதிர்பார்த்த வளர்ச்சி படிநிலைகளை சங்கங்கள் இன்னமும் எட்டவில்லை. எனவே மக்களின் முழுமையான பங்களிப்பும் அர்ப்பண உணர்வு மிக்க நிர்வாக செயற்பாட்டினூடாகவுமே கூட்டுறவுச்சங்கங்கள் வளர்ச்சி பெறமுடியும் கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு நிகராக தனியார் நிறுவனங்கள் இயங்கஆரம்பித்து விட்டன.

எனவே மக்களுக்கு நிறைவான சேவையை வழங்கக் கூடிய செயற்திறனை கூட்டுறவுச் சங்கங்கள் பெறவேண்டும். அத்தோடு ஜனநாயக முறையிலான நிர்வாகத்தெரிவுகளும் இடம்பெற வேண்டும் அப்போது தான் கூட்டுறவை மீளவும் கட்டியெழுப்பமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் ஒரு விற்பனைக்கிளையும் மாவடியம்மன் வீதியில் ஒரு கிளையும் சுமார் நான்கு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டன. இதேவேளை சுமார் 2 மில்லியன் ரூபா செலவில் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உமையாள்புரத்தில் ஒரு விற்பனைக் கிளையும் அமைக்கப்பட்டது. இவற்றின் விற்பனை நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தவராசா, கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆனந்தரூபன், கிராம அலுவலர்களான சத்திய நாதன் மற்றும் ரூபசிங்கம் ஆகியோரும் கரைச்சி கிழக்கு. பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் கணேசலிங்கம், கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் இரவீந்திரன் ஆகியோரும் சங்கங்களின் பொது முகாமையாளர்களும், சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களும், பணியாளர்களும், பொதுமக்களும் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விசேட ஆற்றல் உள்ள அதிபர்; சு.ஸ்ரீகுமரன் ஜனாதிபதியால் தெரிவு



(கீரிமலை)

விசேட ஆற்றல் மிக்க அதிபர் தெரிவில் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வடமாகாணத்தில் இருந்து தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரேஒரு அதிபர் என்ற பெருமையினை இவர் பெற்று வடமாகாணத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவருக்கான கௌரவிப்பு விழா நாளை காலை 10.00 மணிக்கு மகரகம மீட்பேயில் அமைந்துள்ள தலைமைத்துவப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் 9 மாகாணங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 25 விசேட திறமையுள்ள அதிபர், ஆசிரியர்கள் ஜனாதிபதியால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தேசிய மட்டத்திற்கு 3 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூவரில் வடமாகாணத்தின் ஒரே ஒரு அதிபராக சு.ஸ்ரீகுமரன் விளங்குகிறார் ஏனைய இருவரும் ஆசிரியர்கள் ஆவா. இந்த ஆசிரியர்களும் இவ்விழாவில் விருது பெறவுள்ளனர்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் இ.சுபாஸ்கரன், யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.பரமேஸ்வரன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ள விசேட ஆற்றலுள்ள ஆசிரியர்கள் ஆவர். (06)



வவுனியா தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாசின் 'நலமுடன்' மற்றும் 'மகிழ்வுடன்' ஆகிய இரு நூல்களின் வெளியீடு வைரவபுளியங்குளம், ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்றது. முதற்பிரதியினை வைத்தியகலாநிதி வீ.சுதாகரன் பெறுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (160)

## இந்திய....

புடனான பேச்சுக்களை அரசாங்கம் நடத்தவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் பத்தாம் திகதி புதுடில்லிக்குச் செல்லவுள்ள சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து பேர் கொண்ட குழுவிற்கு ஜனாதிபதி மகிந்த, பிரதமர் மன் மோகன் சிங் இடையே இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பாக இந்தியா விளக்க மளிக்கவுள்ளது. இதன்போது அரசு-கூட்டமைப்பு பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்கும் அதேநேரம் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்பதையும் இந்தியா உத்தரவாதப்படுத்தவுள்ளது.

சம்பந்தன் தலைமையிலான குழுவினர் இந்திய மத்திய அமைச்சர்களான நாராயணசாமி, எஸ்.எம்.கிருஷ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதுடன், பிரதமர் மன் மோகன் சிங்கையும் சந்திக்கவுள்ளனர்.

புதுடில்லி செல்லவுள்ள கூட்டமைப்பின் குழுவில் இரா. சம்பந்தன், மாவை. சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகிய தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகிய தமிழரசுக்கட்சி அல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

இதேவேளை, தற்போதைய தேக்க நிலைக்கு அரசு வாக்குறுதியளித்தபடி செயற்படாமையே காரணமென வும் கடந்த ஜனவரி மாதம் பேச்சுக்குத் தாம் உடன்பட்டபோதிலும் எதுவுமே நடைபெறவில்லையெனச் சம்பந்தன் குற்றஞ்சாட்டியுள்ளதாக சண்டேரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

## முன்னிலை...

நடைபெற்ற சிறுவர் தின நிகழ் வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அமைப்பினர் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் நேற்றைய தினம் கொழும்புக்குச் செல்வதற்கு முன்னர் நல்லூருக்குச் சென்ற போது அவர்களைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக் கிளில் வந்த இருவர் இவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக சுதந்திரமான பெண்கள் அமைப் பின் தலைவி திமுது ஆடிகல தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன்சிகேரா தெரிவித்துள்ளதாக திமுது ஆடிகல தெரிவித்தார். (02)

## இருபாலை...

சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

சிவலிங்கம் அனுராஜ் (வயது-26) என்பவரே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து தகவலறிந்த கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று இவ்விபத்துக் குறித்து விசாரணையை மேற்கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இருபாலைப் பகுதியில் சிற்றூர்தி விபத்துக்குள்ளாகியதில் மூவர் உயிரிழந்ததுடன், பத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ, 02)

## நீதிச்சேவை...

திலகரட்னவின் கையடக்கத் தொலைபேசியையும் பறித்துச் சென்றுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த மஞ்சுள திலகரட்ன கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவின் படி பொலிஸ் மா அதிபர் விசாரணைகளை நடத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன், இந்தத் தாக்குதல் சம்பவத்தை ஐ.தே.க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் வன்மையாகக் கண்டித் துள்ளன.

இதனிடையே நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தாக்கப்பட்டமையை கண்டித்து நாட்டிலுள்ள சகல நீதவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் இன்று முதல் நீதிமன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை என தீர்மானித்துள்ளனர்.

## இலங்கைக்கான...

யுத்தத்தின் பின்னரான இலங்கையின் நிலைமைகளை நேரில் கண்டறிய விஜயம் செய்யுமாறு அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அழைப்பு விடுத்திருந் தது.

நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயத்திற்கு முன்னோடியாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் மூன்று விசேட பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர். அவர்கள் தமது விஜயத்தின் போது ஆராய்ந்த விடயங்கள் குறித்த அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் ஃகையளித்துள்ளனர்.

இந்தப் பிரதிநிதிகளின் அறிக்கைக்கு அமைய இலங்கை விஜயம் குறித்து நவநீதம்பிள்ளை தீர்மானிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சூதாட்டத்தில்....

இவர்கள் தாங்கள் ஊது பத்தி வியாபாரம் செய்வதாகவும், தாம் தங்க வசதி இல்லாமல் புகையிரத நிலையத்தில் தங்கியிருப்பதாகவும் விசாரணையின் போது தெரிவித்தனர்.

செல்வம் அஜித்குமார் (வயது-15) வவுனியா, செல்லத்துரை சந்திரசேகர் (வயது-23) வவுனியா, மூர்த்தி விமல் (வயது-22) புத்தளம், ரவீந்திரன் கோபி (வயது-19) திருகோணமலை, செல்வம் டேவிட் (வயது-16) வவுனியா ஆகிய ஐந்து சிறுவர்களே இவ்வாறு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு இன்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (இ)

## பிரதேசசபை...

அதிகாரி கூறியதாகத் தவிசாளர் மேலும் குறிப்பிட்டார்.

தற்போது இராணுவமே இக்காணியைப் பொறுப்பேற்றுள்ளது. நல்லூர் பிரதேசசபை ஐந்தரைப் பரப்பளவு கொண்ட இக்காணிக்குள் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

அரச அதிபர் இக்காணியை இராணுவத்துக்குக் கையளித்து விட்டதாக இராணுவம் தெரிவித்தபோதும், தான் அதனைக் கையளிக்கவில்லை எனவும், தனக்கு அந்த அதிகாரம் இல்லை எனவும் அரச அதிபர் மறுப்புத் தெரிவித் துள்ளதாகத் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(137)

# தெரிவுக்குழுவில் பங்குபற்றாமை தீர்வுத்திட்டத்தில் பின்னடைவு

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் எதிர்க்கட்சிகள் பின்பற்றி வரும் நிலைப்பாடானது தீர்வுத் திட்ட முனைப்புகளில் பாரிய பின்னடைவை ஏற படுத்தும் எனத் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்காமை பிழையானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி,தமிழ்த தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி ஆகியன இதனை விடவும் சாதகமான அணுகுமுறைகளை பின்பற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கும் இந்தக் கட்சிகளுக்கு வேறு மாற்று வழிகளும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகளின் மூலம் மட்டுமே தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான இறுதித் தீர்வுத் திட்டத்தை எட்ட முடியாது.

தேசியப் பிரச்சினை தொடர்பில் ஆளும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் இணைந்தே தீர்வுத் திட்டங்களை எட்ட முடியாது.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் தமது அமைச்சு மொழிக் கொள்கைகளை அமுல்படுத்தி வருவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

# – 33 வருடங்களின் பின்னர் – உலக கிண்ணமொன்று மேற்கிந்தியா வசம்



(கொழும்பு)

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்ற ருவென்ரி - 20 உலக கிண்ண இறுதிப்போட்டியில் இலங்கை அணியை 36 ஓட்டங்களால் தோற்கடித்து மேற்கிந்தியத் தீவுகள் அணி, 33 வருடங்களின் பின்னர் உலக கிண்ணமொன்றை கைப்பற்றியுள்ளது. முன்னதாக போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி மாலன் சமுவேல்ஸின் அதிரடியில் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கிறிஸ் கெயில் ஏமாற்றமளித்து 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். எனினும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் இருப்பை உறுதி செய்த மாலன் சமுவேல்ஸ் 6 சிக்ஸர்கள் அடங்கலாக 78 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எவரும் பெரிதாக பிரகாசிக்கவில்லை. பிராவோ 19, டரன்சமி 26 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் இலங்கை அணி வீரர்கள் மிகவும் சிறந்த முறையில் செயற்பட்டனர். அஜந்த மெண்டிஸ் 4,மத்தியூஸ், தனஞ்செய தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர். எனினும் மலிங்க [illegible]டங்களை (54) வாரி வழங்கினார்.

பதிலுக்கு 138 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 18.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் மஹேல ஜயவர்த்தன 33, குலசேகர 26, சங்கக்கார 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் சுனில் நரைன் 3, டரன் சமி 2, பத்ரி ஹராம்பவுல், சாமுவேல்ஸ் தலா 1விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி 2012 ஆம் ஆண்டிற்கான ருவென்ரி-20 உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சாமுவேல்ஸ், தொடர் நாயகனாக அவுஸ்ரேலிய வீரர் வட்சன் தெரிவாகினர்.

# நல்லிணக்க முனைப்புகளில் கவனம் செலுத்தும் இலங்கை

## ஜப்பான் பாராட்டு

நல்லிணக்க முனைப்புக்களில் இலங்கை கவனம் செலுத்தி வருவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

நல்லிணக்கம் புனர்வாழ்வு புனரமைப்பு உள்ளிட்ட விடயங்களில் இலங்கை கவனம் செலுத்தி வருவதகாக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 60 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் கொய்ச்சியாரோ கெம்பா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கும் இலங் கைக்குமான சுற்றுலாத்துறையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அரசியல், கலாசாரம், பொருளாதாரம் உள்ளிட்ட சகல முக்கிய விடயங்களிலும் இலங்கையுடன் நெருங்கிய உறவுகளைப்பேண ஜப்பான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு ஆயுதங்கள் வைத்திருந்தவர் கைது

வெளிநாட்டு ஆயுதங்களுடன் உள்நாட்டிலும் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரஷ்யா, ஜேர்மன் ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களும் இவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

காலி ஹிமதூவ பிரதேசத்தில் வைத்து இந்த ஆய்துங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் வாகனக் கொள்ளை, போதைப் பொருள் கடத்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# பல்கலைக்தழகங்களுக்கு இந்தியப் பேராசிரியர்கள்?



பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு பேராசிரியர்களை கடமையில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள் இரண்டு பொறியியல் பீடங்களுக்கு வெளிநாட்டு பேராசிரியர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர். காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்த உத்தேச பொறியியல் பீடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த இரண்டு பீடங்களிலும் இந்தியப் பேராசிரியர்களை கடமையில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய பீடங்கள் ஆரம்பிக்கப்படும் காலப்பகுதியில் உடனடியாக பேராசிரியர்களை கடமையில் ஈடுபடுத்த முடியாத காரணத்தினால் இவ்வாறு வெளிநாட்டுப்பேராசிரியர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

எனினும் வெளிநாட்டுப் பேராசிரியர்களைக் கடமையில் ஈடுபடுத்தும் அதிகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடையாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையும், இந்தியாவும் இணைந்து எஞ்சிய புலிகளை அழிக்க வேண்டும்

எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்பட வேண்டுமென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் ஆயுத செயுற்பாடுகள் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்பட்ட போதிலும், வெளிநாடுகளில் புலிகளின் ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிய சந்தர்ப்பங்களைக் கூட பயன்படுத்தி விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிண்ணய முயற்சிக்கக் கூடும்.

பிரிவினைவாதக் கோட்பாடுகளை விடுதலைப்புலிகள் தொடரச்சியாக உலகின்பல நாடுகளில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் பிரசன்னம் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றது.

இலங்கையும் இந்தியாவும் ஒன்றிணைந்து விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பை தகர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது. அப்பாவிகள் என்ற பேரர்வையில் விடுதலைப் புலிகள் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், இலங்கையின் பாரிய பிரச்சினைகளுக்கு புலிகளே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நீதித்துறை – நாடாளுமன்ற முரண்

## சபாநாயகர் விசேட உரை

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நீதித்துறைக்கும், நாடாளுமன்றத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்பாக நாளையதினம் நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தும் விசேட உரையொன்றை நிகழ்த்த உள்ளதாக தெரியவருகிறது.

திவிநெகும சட்டமூலம் தொடர்பான தீர்ப்பை உயர் நீதிமன்றம் தனக்கு நேரடியாக அறிவிக்காது, நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க திஸநாயக்கவுக்கு அறிவித்ததன் மூலம் தனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக சபாநாயகர் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

சபாநாயகரின் இந்த அறிவிப்பு, நாடாளுமன்றத்திற்கும், நீதிமன்றத்திற்கும் இடையிலான மோதலை பகிரங்கமாக அறிவித்த சந்தர்ப்பம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சபாநாயகர் ஆற்றவுள்ள உரையானது நீதித்துறையில் அழுத்தங் களை ஏற்படுத்தும் எனவும் நீதித்துறைக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இருந்து வரும் பனிப்போரை அது உச்சத்திற்கு கொண்டு செல்லக் கூடும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஜனாதிபதி தலைமையில், ஆளும் கட்சி யின் நாடாளுமன்றக் குழுவின் விசேட கூட்டம் இன்று நடை பெறவுள்ளது. இதன் போது நீதித்துறை சார்ந்த பாரதூரமான சில தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

# மஞ்சுள மீதான தாக்குதல் நீதித்துறைக்கு விழுந்த அடி

## கல்கிசை நீதவான் தெரிவிப்பு

நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதல் தொடர்பில் மூன்று தினங்களுக்குள் விசாரணை நடத்தப்பட்டு முழுமையான அறிக்கையொன்றை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கல்கிஸை நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ருஷிர வெலிவத்த பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தின் ஒழுக்கம் மற்றும் சட்டத்தை நிலைநாட்டி வரும் அதிகாரியான நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல் நீதிச் சுதந்திரத்தின் மீது விழுந்த அடியாகும். அதனால், இந்தத் தாக்குதலை சிறு விடயமென கருத்திற்கொள்ள வேண்டாம் எனவும் நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதல் தொடர்பில் நீதவானிடம் தகவலளித்த பொலிஸார், தாக்குதல்காரர்கள், திலகரட்னவின் கையடக்கத் தொலைபேசி மற்றும் மூக்குக் கண்ணாடி போன்றவற்றை எடுத்துச் சென்றுள்ளனர் எனக் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த நீதவான், இந்த 'தாக்குதல் நீதிமன்றத்தின் மீது நட்டத்தப்பட்ட தாக்குதலுக்கு ஒப்பானது எனவும், இதன் விளைவுகளைக் கருத்திற் கொண்டு விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.